சாட்டையும், சிலுவையும்

Pax Ravichandra

pax.ravichandra@gmail.com

5-2-2024

சாட்டையும், சிலுவையும்

எண்	பொருளடக்கம்
1	நீறும், நெருப்பும்
2	நிழலும், நிஜமும்
3	நிலவு உலவும் வானம்
4	நினைவுகள்
5	நித்தம் நினைத்திருப்பேன்
6	ஓ தேவ மைந்தனே
7	பாதை மாறிய பயணம்-4th Wise Man
8	பாட்டும் நானே பாவமும் நானே
9	பயணம்
10	பெண்ணிய விடுதலையாளர் இயேசு
11	பிருந்தாவனக் கோபியர்கள்
12	பிட்சா பாத்திரம்
13	பொன்னூஞ்சல்
14	பூ , தீ
15	புல்லாங்குழல்
16	புதிய முகம்
17	புதமைச் சித்தன் இயேசு
18	புயலிலாடும் பூ
19	றொகின்ஜா குடிகள்
20	சாதுவும் சீடரும்
21	சாத்தானின் வேதம்
22	சாதிகள் இல்லையடி பாப்பா
23	சாதி
24	சத்திய வேள்வி
25	சாதியம்
26	சாட்டையும், சிலுவையும்
27	சாவுமணியும், சங்கொலியும்
28	செந்தீ
29	சிலுவை
30	சிப்பி

நீறும், நெருப்பும்.

மனிதனே நீ மண்ணாய் இருக்கின்றாய்
மண்ணிற்குத் திரும்புவாய்-மறவாதே! மறவாதே!
இன்னிசையோடு-இதயத்தை அச்சுறுத்தும் பாடல்
நீறால் நெற்றியில் சிலுவைக் குறியிட்டு வழிபாடுகள்

சடமான கூற்றில், மடமை அப்பட்டாய்த் தெரிய
அறியாத மந்தைகள் அப்பாவித்தனமாய்
தலையை அசைக்க-மலரும் திருநீற்றுப் புதன்.
அழியாத ஆன்மா நீ அறியாத பக்தன்



மது துறந்து. மாமிசம் மறந்து-நாற்பது நாளும்
சுத்தபோசனம், ஒரு சந்தி என்று
பக்தி வேடம் பூணும் பரிசுத்த வாரம், நாடகம்

ஆர்ப்பாட்டமாய்ப் பாடல்கள் ஒலிக்க
ஊதா வண்ண கொடிகள் காற்றில் பறக்க-
சிலுவைப் பாதையின் ஆரவாரம்

நெற்றியில் நீறும்-நீறுபூத்த நெருப்பான நெஞ்சில்
ஆசையும், ஆணவமும் பசுமையாய் நிலைத்திட
வாட்டிடும் வறுமை கண்டும் இரங்காத நெஞ்சம்-
கருணை பூத்து இருப்பதைப் பகிர இளகாத கல்மனம்.

ஆண்டவர் உம்மோடு இருப்பாராக, உம் “ஆன்மாவோடும்”
இருப்பாராக, ஆன்ம தரிசனம் அறியாத மந்தை
அஞ்சுகமாய்ச் சொல்வதை சொல்லி, பக்திக் கூண்டுக்குள்
பரவசமாய் பல்லாண்டு வாழும் அவலம் அறியாத நிந்தை

காலையிலோ புது நெருப்போடு உயிர்த்த ஞாயிறு வழிபாடு
மாலையிலோ கோலாகலமாய் கோயில் வளாகத்தில்-
“டொம்போலா விளையாட்டு”
நத்தார், பெரிய வெள்ளி, உயிர்த்த ஞாயிறு
சாரமற்ற பண்டிகை-கொண்டாடக் கேளிக்கை

நாளை முதல் குடியும், கூத்தும் தொடர
அடுத்த தவக்காலம் மட்டும்
கேலிக்கை காலம் என மாறிடும் வாழ்வு?



மரண யாத்திரைகள் மாறாது தொடர்நதிட
விண்ணக யாத்திரை விழிப்புணர்வுற்றவர்க்காய் ஆகிட
விளக்கை கொளுத்தி மரக்காலின் கீழ் மறைத்து
முத்துக்களை மிதிக்கும் காட்டுப் பன்றிகள்.

நிலையாமை அறிந்து-நிலையான சுயத்தை தேட
அலையும் மனதை உள்ளே திருப்பி சுயத்தில் நிலைக்க
மனந்திரும்புங்கள்-மானிடரே இறையரசு உங்கள் உள்ளே
இன்றும்.அழைக்கும் இயேசு

தவத்திற்கு காலமில்லை
விழித்த மனம் தவமிருப்பதில்லை
விழிப்புணர்வே தவம்.

மெய் வருத்தி-மனதில் பொய்யிருத்தி-மார்பில் சிலுவையும்,
நெற்றியில் நீறும் வைத்து, உச்சிக் குடுமியும்,
காவியும், தொப்பியும் மனம் வெதும்பிட,
மதவாத வேடங்களானதே, மானுட வாழ்வு நாடகமானதே

நோன்பும், தவமும் கேலிக்கையாக-நீற்றுப் புதனும்-
உயிர்த்த ஞாயிறும் வெற்றுச் சடங்கானதே.
குருடருக்கு குருடர் வழிகாட்டும் பயணம்.
குழியில் விழுவது நிஜமானதே

நீறும். நெருப்பும் சடத்தின் முடிவான வடிவங்கள்
எரியும் முட்செடியில்-இறை தரிசனம்.
இருப்பவர் நாமே என்பது- இருப்பின் நிதர்சனம்.

பச்சை இலைகள் உதிர்வதில்லை-
பழுத்த இகைளே உதிர்கின்றன
பட்ட மரமே பற்றி எரிகின்றது

பழுத்த இலைகளாய் ஆசைகள் வீழ்ந்திட
மனம் தானாய் உதிர்ந்திட
உள்ளிருந்து மலரும் உன்னத சந்நியாசம்.

ஆசைப்புயலில் சிக்கமல், மோகச் சுழலில் மூழ்காமல்
ஞானத்தின் வேர்கள் தர்மத்தில் நிலைக்க
சத்திய தரிசனமாய் சந்நியாசம் மலர
சச்சித்தானந்தமாய் இருப்பு.

‘நான்’’ என்ற சக்திக்கு
ஆணவம்- பிரம்மம் என இரு முகங்கள்
ஆணவம் அழிந்து-
பிரம்மம் மலர்தலே மனந்திரும்புதல்

ஆணவத்தின் குறியீடே ஆதாம், பரிபூரண சரணாகதியின்
வெளிப்பாடோ இயேசு, இன்பவனத்திலிருந்து
ஆணவம் வெளியேற, இயேசு ஏதேனுள் நுழைந்திடப்-
பூர்த்தியாகும் வாழ்க்கை வட்டம், சச்சித்தானந்தம்
தூய மனதிற்கே-இறை தரிசனம்

ஆணவம் களைதலின் அற்புத இசையே
பிரபஞ்சகானத்தின் பேரதிர்வே மலைப் பொழிவு,
ஆணவமே சாத்தான்-சுத்த சைதன்யமே தெய்வீகம்
அறிந்தவர் தெளிந்து, சடங்கினைத் துறந்தார்

உள்ளம் கோயிலாக-சீவன் சிவலிங்கமாக
வழிபாடு உள்ளே-வழிபடுபவனும் உள்ளே
அன்பையும், உண்மையையும் வாழ்வாக்கி வாழ்தலே
மெய்யான அகவழிபாடு-
மற்றெல்லாம் கிளிப்பிள்ளைக் கோட்பாடு



அன்பே சிவம்-வாழ்வே தவம்
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-12-10-2023

நிழலும் நிஜமும்

நிலவும், விண்மீன்களும் ஆளும் கருவான் அழகைக் காண
காரிருள் வேண்டும், கவித்துவ மனம் வேண்டும்
ஒளிரும் பூமியின் பேரழைக் காண-
குழந்தை மனம் வேண்டும்.

பகல் நிலவை யாரும் இரசிப்பதில்லை
பால் நிலலை மழலைகளுக்கு-அமுதூட்டும்
தாய்களும் காட்ட மறப்பதில்லை.

கவிதாசூருக்கு காந்தியோ, மகாத்மா,
கோடஸேக்கோ துரோகி
சீடர்களுக்கு இயேசுவோ இறைமகன்
தலைமைக் குருக்களுக்கோ பொய்யன், மாயன்

அழுகைச்சுவர் யூதருக்கு இறை இல்லம்
முஸ்லீம்களுக்கு அல் அக்ஸா பள்ளி வாயில்
மதவாத மனங்களில் வாழும் பொய்மை
தூய மனத்தவருக்கே தரிசனமாகும் மெய்மை

கன்னியரின் காதல் காளையருக்கு இன்பம்
மழலைகளின் மொழி பெற்றவருக்குப் பேரின்பம்.

கானக்குயிலின் பாடல்-கலாபமயிலின் நடனம்
சேவலின் இராகம், கரையும் காகங்களின் இசை
சங்கினுள் ஒலிக்கும் சந்தம் என்ன ராகம்?
என்ன நடனம்?
குரு யாரோ? சீடன் எவரோ?

எத்தனை கடவுள்கள் நம் மத்தியில்-
நம் மதங்களில்-நாஸ்திகனுக்கும்,
யதார்தவாதிக்கும் சத்தியமே மதம்

அன்னையும் பிதாவுமான உறவு
இன்றும் அற்புதத்தில் அற்புதம்

விவாகரத்தும் மணவாழ்வின் விகாரமோ?
விபத்தோ? யதார்த்தவாதிக்கு உண்மையே பாதை
ஆஸ்தீகருக்கோ பல பாதை

அன்பின் உயர்நிலை தெய்வீகம்-அன்பே சிவம்.
புத்த மனம்-கிறிஸ்து மனம், கிருஷ்ண மனம்
எல்லாம் ஒன்றே- அதுவே சுத்த சைதன்யம்
இருப்பெனும் பெருங்கடலில் எழுந்த
விழிப்புணர்வின் பேரலைகளாய் அவை
கடலும், அலையும் ஒன்றே

புல்லாயிருந்தால் மிதித்து நடக்கின்றோம்
முள்ளாயிருந்தால் விலகிப்போகின்றோம்.

பூக்களின் வண்ணமும் வாசமும் ஆயிரமாயிரம்
புள்ளினங்களின் பாடல்களும் ஆயிரமாயிரம்
படைப்பில் எத்தனை அழகு-
இயற்கையே தெய்வீகம்.

இயேசுவின் சகோதரர்க்கு-இயேசு புதிரான மனிதர்
மரியமதலேனானுக்கோ இவரோ இறைமகன
கல்வாரியில் கள்வனுக்கு புரிந்த உண்மை
பிலாத்துவுக்கும், இடது கள்வனுக்கும்,
யூத குருக்களுக்கும் புரியாத மேன்மை

புண்ணிய நதிகளிலும்
மதவாதச், சாதிய அழுக்குகள்

பாரோவின் அநீதிக்கு-கடவுளின்
பத்து வல்ல செயல்களும் தண்டனை என்றால்
கண்ணுக்கு கண் பல்லிற்கு பல் நீதியாகும்
மானுடம் குருடாகும், பயங்கரவாதம் நீதியாகும்.

எல்லாம் சார்பு நிலை உண்மைகளே
நிறை உண்மை நமக்குள்ளே
படைக்க முடியாத சூனியத்தை அழிக்க முடியாது
மனமழிந்தால் ஆனந்தம் நாமோ சச்சிதானந்தம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-06-05-23

நிலவு உலவும் வானம்

நிலவொளியில் உலாப்போனேன்,
நெஞ்சிலே பேரமைதி:
கனவுலகு கடந்த வாழ்வில்
காண்பதெல்லாம் இறை வடிவம்

வெற்றுப் படகாய் பயணம் வெறுமையே பேரானந்தம்.
சுற்றும் உலகும், வான் சுடர்களும்
தழுவும் தென்றலும்-அமைதியில்
உறங்கும் விருட்சங்களும், ஓடும் மேகங்களும்
அலையும் கடலும் உறவு சொல்ல
மனதிலே பேரானந்தம்

சில்வண்டுகளின் கானம்,சில்லென்ற காற்று
சிறகடித்த பறவை ஒன்று
துள்ளிப் பாய்ந்த மீன்கள் கூட்டம்
அமைதியில் ஆழ்ந்த தியானத்தில் பிரபஞ்ச உலகு.

நிலா உலவும் வானில்தான்-எத்தனை
எத்தனை நட்சத்திரப் பூக்கள்.
இருளும், ஒளியுமாய்ச் சுற்றும் உலகு
இருளும் ஒளியுமான வாழ்வும் இறை வடிவமான அழகு
தன்னுணர்வும், உணர்வின்மையுமாய் மனிதன்
விழிப்புணர்வாய் இறைவன்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-06-05-23

நினைவுகள்

வண்ண இதழ்கள் விரித்து
மெல்லக் கண் திறந்தது-மொட்டு
இறைவன் மகிழப் இறைதுதி பாடிப்
பக்தனாய் பறந்தது பூஞ்சிட்டு

உள்ளக்கோயிலில் விளக்கேற்ற தெரியாத உள்ளங்கள்-
உச்சியில் தீ பூத்த மெழுகுவர்த்திகளோடு-
ஆலயத்தில் ஊர்வலம் போயிட
பூவாய் மலரத் தெரியாத மனதை-பூச்சொல்ல
நறுமணமாய் வீசாத வாழ்வை தூபம் சொல்ல
நீறாய் போகும் சவத்திற்கு திருநீறு பூசி
அன்பே சிவம் என வாழாமல்
சிவம்தேடி அலையும் சவங்களுக்கு
உள்ளுறையும் இறைவனும் கல்லுக்குள் வேண்டும்,
கற்சிலையாய் வேண்டும் என்னே பரிதாபம்!

மணி நாதம் சக்கரங்களைத் தூண்ட
மனநாதம் சங்கரனை வேண்ட
வேண்டாத வரம் வேண்டி அலைகின்ற மாந்தருக்கு
வேண்டிய வரம் அளிப்பவனோ-தேடி நின்றான்
தாழ்வுற்ற மனங்களில் உறைவிடம் தேடி,
வாடி நின்றான்- பெருங்கூட்டத்திலும்
ஒரு மெய்யன்பனை நாடி.

வண்ணவிளக்குகளின் அலங்காரம் கண்களைப் பறித்திட,
வாண வேடிக்கைகளின் சத்தம் விண்ணை முட்டிட
பண்ணை பழித்து பக்திப்பாடலகள் இரைச்சலாய் ஒலித்திட
விண்ணவனை விளித்து வெற்றுச் சடங்குகள் நடந்திட
அரங்கேறும் ஆலயத் திருவிழா.

மண்போட்டால் மண்விழாத வெற்றுக்கூட்டத்தில்
அன்னையைத் தொலைத்த குழந்தையைபோல்
ஆண்டவனும் அழுது நின்றான் ஒரு பக்தனை தேடி
அந்தோ பரிதாபம்!

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-04-2023

நித்தம் நினைத்திருப்பேன்

நித்தம் நினைத்திருப்பேன்-உன்னை
நெஞ்சில் வைத்துச் சுவைத்திருப்பேன்-என்தன்
சித்தம், நினைப்பு செய்கை உள்ளளவும்-அப்பா
உன்னைத் தொழுது மகிழ்ந்திருப்பேன்

பூ மலர்ந்து உன் மணம் பரப்பும்
புள்ளினம் வாய் திறந்து உன் புகழ் பரப்பும்
நான் மகிழ்ந்து உன் புகழ் பாட-எனை
ஆட்கொண்டு அருள்புரிவாய் பெருமானே

அன்பிருக்கும் அன்னை உருவில், அமுதிருக்கும்
வண்ண மலரில், பொழுதிருக்கும் புவியின் அசைவில்
அப்பா, உன்னைத் தொழுதிருக்கும் என் மனமோ
என்றும் மகிழ்ந்திருக்கும் உன் நினைவில்

காட்சியும் நீயாகி என் கானமும் நீயாகி
என் மூச்சும், பேச்சும் உனதாகி
உயிரே உன்னால் வாழும்
நாளெல்லாம் என் திருநாளாகும்

இமைப்பொழுதும் உன்னை மறவாத இதயம் வேண்டும்-
அமைதியிழந்து அல்லலுறும் போதும்
'அப்பா' உன்னை அன்புகூரும் இதயம் வேண்டும்

நதியின் பயணமோ கடலைச் சேரும்வரை
விதியின் பயணமோ வினைகள் தீரும்வரை
ஊதாரி எனது பயணமோ அப்பா
"வீடு" உன்னைச் சேரும்வரை.

அன்பே சிவம்
எல்லாப் புகழும்இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra - 2.10.2023

ஓ தேவ மைந்தனே!

வசையும், வாதையும் செய்து-மனுமகனைச் சிலுவையில்
தொங்கவிட்ட திருச்சங்கம், இறை நிந்தை செய்து-
தம்மையே நிர்வாணமாக்கிய பங்கம்
வைதாரையும், வதைப்போரையும் மன்னிக்க
தந்தையிடம் மன்னிப்பை இரந்த மனுமகனோ
கருணையின் சிகரம்

உயர் பிரக்ஞையின் விழிப்பில்"
"உயரத்தில்" இறைவார்த்தையிருக்க
அகங்காரத்தின் "அதலபாதாளத்தில்"
மதக்குருடர் வீழ்ந்து கிடந்த துயரம்

இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்தும்
"கிறிஸ்து மீண்டும் வருவார்" கோஷம் ஓயவில்லை-
"ஆழமற்ற கடலில்"மீன் பிடிக்கும்
சீடர் நிலையில் எந்த மாற்றமுமில்லை.

ஏழ்மை, கற்பு, கீழ்படிதல் வாக்குறுதிகளாக
வெண்ணாடைக்குள்'விழிப்பில்லாத்" தூக்கம்
குருத்துவமோ சாரமற்ற உப்பான துயரம்

உடமைகள் பெருகிட-உடைத்து கட்டும் மூடச் செல்வர்கள்-
கள்வர் திருடுவதையும், பூச்சி அரிப்பதையும் தேடிச்
சேமிக்கும் செல்வர்கள், எஜமான் வரத் தாமதிக்க
குருடர்க்கு குருடர் வழி காட்டும் கூத்தாடிகள்

காட்டி கொடுப்பும், மறுதலிப்பும் மாறவில்லை
மதமோ நிறுவனம், ஆன்மீகமோ காய்க்காத அத்தி மரம்
அண்ணகரோ தலைமைக் குரு

ஒடுக்கப்பட்ட எளிய மனங்களில், இறைவார்த்தையைத்
தூவிய ஞான உழவன், மந்தை பிரிந்த ஆடுகளுக்காய்
உயிர் ஈந்த நல்லாயன், மீனவர், ஆயக்காரன், லேவியனைச்
சீடர்களாக்கி , கூழாங்கற்களை வைரமாக்கிய இரஸவாதி

"***கடவுள் நம் தந்தை***" -நீங்கள் என் சகோதரர்
நாமோ இறைமக்கள் என முழங்கிய
தனி மனித அகக்கிளர்ச்சியாளன்



தொட்டவனும், தொட்டவளும் குணமாக
நோயுற்ற மானுடத்தை-வார்த்தையாலும்
வாழ்வாலும் குணமாக்கிய தேவ வைத்தியன்

அந்தகார இருளில் தடுமாறியவர்களுக்கு
"***உண்மையின் ஒளிகாண விழி*** கொடுத்து-
விலைமகளுக்கும் புது வாழ்வளித்து சீடராக்கி
பெண் விடுதலைக்காய் புரட்சி செய்த பெண்ணியவாதி

ஏழைகளை உயர்த்திச்-செல்வரை அநாமதேயனாய்ச் சாடி
"இலாசரை" " ***ஆபிரகாம்***" ***மடி அமர்த்தி***
பகிர்ந்து வாழ்தலின் புனிதத்தை போற்றிய புரட்சியாளன்

அன்பே தெய்வம் -இரக்கம், மன்னிப்பு மானுட விழுமியம்
உன்னைப்போல் உன் அயலவனை நேசி
ஆண்டவனை நேசிப்பதற்கு நிகர்

பலியை அல்ல இரக்கமே இறை விருப்பம்
சடங்காசரங்களைப் புறந்தள்ளி, மதம் கடந்த
"நல்ல சமாரியனாய்" வாழ அழைப்பு விடுத்த அன்பன்.

பாதங்களை கழுவிப்-பணிவிடை பெற அல்ல
பணி விடை புரிவதே பணி வாழ்வின் இலட்சியம்
வாழ்வால் போதித்த தேவகுரு

'பரபாசுக்கு விடுதலையும்" "இயேசுவுக்குச் சிலுவை மரணமும்"
தொடர் கதையாக-ஆலயக் கூரைகளில்-இன்றும்
அறைந்து கொல்லக் காத்திருக்கும்-***வெற்றுச் சிலுவைகள்.***
சத்தியத்திற்கான அச்சுறுத்தல்களோ வெற்று சாட்சியங்களோ?

வாழ்வதற்காய்ச் சாவாரோடும், சாவதற்காய் வாழ்வாரோடும்
சுற்றும் உலகில், "என் தேவனே! என் தேவனே ஏன்
என்னைக் கை நெகிழ்ந்தீர்?" இன்றும் ஒலிக்கின்றது

உன் இருப்போ சத்சங்கம்,
மனிதன் இறைவனில் சங்கமிக்கும் **ஆனந்தச் சங்கமம்**
கிறிஸ்து அறிவல்ல-அனுபவம், கிறிஸ்து வார்த்தையல்ல-
விழிப்புணர்வு, உள்ளுணர்வின் உன்னதம்

எல்லாப் புகழும்இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-2.10.2023

பாதை மாறிய பயணம்-The 4th Wise man

வான் நட்சத்திரம் வானவன் மகன் பிறந்த சேதி சொல்ல,
காஸ்பர், வெலிசிசோர், பல்தஸார், கோள் நிலை
ஆய்ந்தறியும், வானிலை அறிஞர்கள், கண்ட வான்நட்சத்திரத்தை
ஆய்ந்து, கலந்து வானவன் மகன் பிறப்பை உறுதிசெய்தார்

பொன்னும், தூபமும், வெள்ளைபோளமும், தேவர் மகனுக்குக்
காணிக்கையாக்கி, தெண்டனிட்டு வணங்கி மகிழ்வோம் என்றே
நண்பர் ஆர்ட்டபானுக்கும் சேதி அனுப்பி , களிப்போடு
நெடும் பயணம் தொடர்ந்தார்

பொன்னோ மன்னர் என, தூபமும் இறைவன் இவரென
வெள்ளைப்போளமோ மானுட அவதாரம் இவர்
மானுட மீட்பிற்காய் இறப்பார் என
மறைபொருளாய் செப்பிட ஞானியர் பயணம்

கீழைத்தேய ஞானிகளும் குழந்தையையும், தாயையும்
தெண்டனிட்டு வணங்கி அங்கீகரித்து மகிழ
இறைமகனோ, மனுமகனான அதிசயம்
தொழுவமோ மாளிகையான இரகசியம்

வானிலே நட்சத்திரம் வழிகாட்ட,
வழிப்பயணமும் இனிதாய் தொடர்ந்திட
ஆர்ட்டபான் பாதையிலே, துன்புறும் ஏழைகள்-
துயருறுரும் தொழுநோயாளிகள்

ஏழ்மையும், நோயும் வாட்டிடும் மானுடத்திற்கு
உதவிக்கரம் நீட்டிட யாருமில்லை, இரஞ்சும் குரல் கேட்க
மனிதமோ கண்ணுக்கு எட்டிய தூரத்திலும் இல்லை

ஊனோ நாறி அழுகிட, உதிரமோ கசிந்து துர்நாற்றம் வீசிட
ஊர்க்கழிவாய் ஒதுக்கிய மானுடம், உணவுக்கும், உடைக்கும்,
உறைவிடத்திற்கும் வழியின்றி, பாலையில்-பெரும் பிணியோடு
பசிப்பிணி வாட்டிட-நாய்களாயப், பேய்களாய்
நாதியற்று அலைந்து நின்றது நெஞ்சை வருத்தியது

கண்களிலோ ஈரம், நெஞ்சிலோ பாரம்,
வாழ்வினிலோ பெருந்துயரம்
மரணம் தேடியும் கிட்டாத வரம்

இறைசாபமோ இந்த தொழு நோய், ஊனை உருக்கி
உயிரை வதைத்து அழிக்கும் கொடுநோய்
ஊர் பிரிந்து உறவு துறந்து ஒதுக்குண்ட பன்றிகளாய்
பறை நாய்களாய் இவர்தம் வாழ்வு

இருள்தான், ஒளியில்லை, வாழ்வில் இனி என்றுமே
உதயமில்லை-மெல்லக் கொல்லும் மரணம்
விரைந்து வந்தால் அதுவே ஆனந்த வரம்
மறையாத துன்பமோ மானுடருக்கு இறைசாபம்

நெஞ்சம் பனியாய்க் கரைந்துருக-ஈரமனம்
இருந்த வைரங்களை விற்று வாழ்வளிக்க
வந்த பயணமோ வழிமாறிப்போனது
வாழ்வோ தானறியாத இறைவழிபாடானது.

தொடர்ந்த பயணம் மறந்துபோக
தொழுநோயாளர் துயர் நெஞ்சை தொட்டிட
ஈகை நெஞ்சில் இரக்கம் பெருகிட
காக்கும் கரமாய் மாறியது ஆர்ட்டமான் வாழ்வு

துன்புறும் மனங்களில் ஆனந்தம் மலர்ந்திட, வாழ்வும்
புது உதயமாய் ஜொலித்திட, ஏழ்மையும். நோயும்
மறைந்திட, முழுமதியும், இளந்தென்றலும் வந்தாட
வைரங்கள் கைமாற-வந்த புது வசந்தம்

உண்டு, குடித்து, உடுத்து, உறங்கிட மறு வாழ்வளித்தவர்,
மருந்தும் கொடுத்து, மானுட சேவையில் தம்மை மறந்தார்
எங்கும் ஆனந்தம் நிலவிட, ஏழைகளின் வாழ்வில் அமைதித்
தென்றல் உலாவிட ஆண்டுகள் முப்பது மெல்லக் கழிந்தது.

இளமையும், செல்வமும் கழிந்திட, முதுமையின் புத்தழகு புதுமலராய்ப்
பூத்திட, வள்ளல் நெஞ்சிலோ ஆனந்த அமைதி, கரியும் வைரமாக
காலங்கள் கோடி போகும், இதயம் கருணையால் ஒளிர்ந்திட -அன்பரோ
வைரமாய் ஜொலித்திட ஆண்டுகள் முப்பது அறியாமல் போனது

நரை, திரை பூத்திட, கருணையால் உள்ளமோ வெண்பனியாய்
ஒளிர்ந்திட, வந்த பயணம் நினைவைத் தொட்டிட-இறைவனைப் போற்றி
வழி நடந்தார் வானவான் மகன் தேடி ஆர்ட்டமான், யாத்திரிகனாய்
தொடங்கிய வாழ்வு புனித யாத்திரையாய் மாறிட மனதிலே பேரமைதி

அமைதியின் நகராம் ஜெருசலேமை அண்மித்திட
கூச்சலும், பலத்த ஆரவாரமுமாய் கும்பல் தொடர
இரையும் கொடு விலங்கிடையே அகப்பட்ட புள்ளிமானாய்
தோள் சுமந்த பாரச்சிலுவையோடு ஒரு இளைஞன்

பழித்துப், பரிகாசித்து நாயாய், நரிகளாய்
ஊளையிடும் மதவெறியர் கூட்டம் ஒரு புறம்
அழுது புலம்பி ஒப்பாரி வைத்து
புலம்பும் அன்னையர் கூட்டம் மறு புறம்

பட்ட சவுக்கடி பலத்தை அரித்திட
பாரச்சிலுவை உடலை அழுத்தப்-தள்ளாடி
நடந்தவர் தடுமாறிப் பாதையில் வீழ்ந்தார்

மார்பிலே கொடுவாள் பாய்ந்த வலியும், முதுகிலே
ரோமச் சவுக்கடி பட்ட நோவும், ஒன்றாய் உயிரையும்,
மெய்யையும் வருத்த, வேதனையால் துடித்த ஆர்ட்டபான்

அனலிடைப் புழுவாய் அன்புள்ளம் துடிக்க
ஆறுதல் மொழிய வார்த்தைகள் இன்றித் தவிக்க
ஓடிச்சென்று வீழ்ந்தவரை அணைத்து
விடாய் தணிக்க நீர் கொடுத்தார்



பாசத்தோடு முகம் துடைத்து, ஐயனே!, உமக்கு உதவிட என்னிடம்
ஏதுமில்லை-இருந்ததெல்லாம் பகிர்ந்தாயிற்று, படும் வேதனை கண்டு
மனம் புலம்ப, பார்வை ஈரமாகி, இதயம் கரைந்துருகி நெகிழ
படும் துன்பம் கண்டு அழுதார் ஆர்ட்டபான்

“ஏழை எளியவர்க்கு நீர் செய்ததெல்லாம் எமக்கே செய்தீர்,
அமைதியோடு செல்க” வீழ்ந்தவர் மெல்ல எழுந்து தள்ளாடி நடக்க
விழிநீர் பார்வையை மறைக்க, யாரிவர் தம் பாடுகளிலும்
இறைவனைப் போற்றும் தூயவர்,

கேடு வந்தபோதும் இறைவனைப் போற்றும் இறைபக்தர்
தேடி வந்தவர் இவர்தானோ? தேவமகனும் இவர்தானோ?
நெஞ்சில் நிம்மதி பிறக்க, ஆனந்த அமைதியை இதயம் சுவைக்க
எல்லாம் இறை செயலே ஈரவிழிகளிளோடு கல்வாரிநோக்கி
தள்ளாடி நடந்தார் ஆர்ட்டபான்

நாடி வந்தவரைத், தேடி வந்தார் தேவமகன்-ஏழையாய்,
துன்புறும் தொழுநோயாளியாய்- கல்வாரிப் பாதையிலே
கழுமரம் சுமந்த குற்றவாளியாய்

தேடி வந்தவரை கண்ட சுகம் நெஞ்சை நிறைக்க-
தேடியவரோ சிலுவையில் -நமக்காய் தம்மை இழக்க
தேவ அன்போ இன்றும் மானுட அன்பைத் தேடுது

தொழுவத்தில் தொட்டில் கட்டி,-கழுமரத்தில்
உயிரைக் கொடுத்து, இரவல் கல்லறையில் உறங்கியவர்
இரக்கின்றார்- நம் இதயத்தில் ஓரிடம் கேட்டு

இப்போதேனும் உங்கள் இதயத்தில்
ஓரிடம் கொடுங்கள் மானிடரே
இறை அமைதி உங்களுக்கே!

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-12-10-2023

பாட்டும் நானே பாவமும் நானே

உயிராய், சடமாய், சக்தியாய், ஐம்பெரும் ஆற்றல்களாய்,
பரமனே மாறிட, பிரமத்தின் சாயலாய்ப் படைப்பு
பரப்பிரம்மமே படைப்பான இருப்பு

புல்லாகிப், பூண்டாகி, மரமாகி, புழுவாகி, விலங்காகி
மனிதனைப் படைத்தவனோ மா கலைஞன்
பாட்டும் நானே பாவமும் நானே என
ஆனந்தத் தாண்டவம் ஆடும் நடராஜன்

சக்தியும், சடமுமாகி சிவ சக்தியாய் சர்வேஸ்வரன் கூத்து
மனிதனே இறைவனாக-ஆணவ மனம் அழித்து
தன்னை அறிய அவன் திருவிளையாட்டு

மனிதன் இறைவனாகாவிடில் வாழ்வு வெறுமையே-
கருப்பைகுழிக்குள் மீண்டும் விழும் அவல நிலைமையே
தன்னை அறிவதே மெய் அறிவு

சூனியமாய்ச் சுந்தரமாய் இருப்பாய் -இல்லாமையாய் அவன்
நிர்க்குண -சகுண பிரம்மமாய் அவன்
காலமும், காலமளித்த-காலியுமாய் அவன்



கடவுளாய் அவன்-கட உள்ளாய் அவன்
நானும் அவன் நீயும் அவன்-நாத பிரம்மம் அவன்
ஆதி அந்தமில்லாத ஜோதி அவன்
ஒருமைக்குள் இருமையாய்-இருமைக்குள் ஒருமையாய்
இருப்பவர் நாமே எனும் இருப்பாய் அவன்

பிரபஞ்ச கானமாய் -விழிப்புணர்வின் சிகரமாய்
பிரபஞ்சப் பெருங்கடலின் பேரலைகளாய்-பெருமான்கள்
கிருஷ்ணா, புத்தர், இயேசு ,எங்குமுள்ள உண்மை ஒன்றே
ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி
அன்பே சிவம் அறிந்தால் ஆனந்தமே-

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-12-10-2023

பயணம்

ஆனந்தத் தூக்கம் கலைய அன்னையின் கருப்பையாம்
ஏதேன் இன்பவனத்திலிருந்து ஆடையின்றி வெளியே வந்தேன்
அழுது புலம்பி ஆர்ப்பரிக்க, கழுவி துடைத்து, ஆடையணிவித்து
அன்னை அமுது கொடுக்க ஆனந்தம்.

வெற்றுடம்போடு, வெறுங்கையராய் வந்து
வெறுங்கையராய் போகும் வாழ்வில்
மண், பொன். பெண், புகழ் தேடிப் போலி ஆரவாரம்

கொண்டு வந்தது ஏதுமில்லை, கொண்டுபோவதும் ஏதுமில்லை
-இடையில் உண்டு, குடித்து உறங்கி எழுந்து, உறவு கொண்டு
சொந்தம் வளர்த்து அழுது புலம்பி ஆறுதல் தேடி
அலையும் வாழ்வு அடங்கிட ஆறடி மண்ணில் தஞ்சம்?
இல்லையேல் தீயில் எரிந்து தேகம் மறைந்திட சாம்பலாய் எச்சம்

மண்ணாலானது மண்ணாய்போயிட
நானும் மண்தானோ? எரித்தால்
மிஞ்சுவது பிடிச் சாம்பல்தானோ?

அன்னையும், தந்தையும் ஈந்தது உடலே
நான் யார் என்ற கேள்விக்கு நாம, ரூபம் உதவாது
அழியாத ஆன்மா நான் என்றால்
அறிவது எப்போது? தேடல் தொடங்கியது

அழியும் உடல் கடந்து அழியாத
ஆன்மாவைத் தேடிடும் யாத்திரீகன் வாழ்வில்
முடிசார்ந்த மன்னன் சாலமோனோ அஞ்ஞானி
முடி துறந்த சித்தார்த்த புத்தனே முழு ஞானி

தேனின் சுவை கரண்டிக்கு அல்ல -நாவுக்குத்தான் தெரியும்,
கோயிலில் இருந்தாலும், கோடி பூஜைகள் செய்தாலும்
குருக்களாய் அபிஷேகம் பெற்றாலும் -தன்னை
அறியாதவன் அஞ்ஞானியே

ஈட்டிய புகழும், உழைத்துத் தேடிய செல்வமும் வாங்கிட முடியாத
சத் சித் ஆனந்தமாய் ‘‘நான்’’,. ‘‘சுத்த சைதன்யமே நான்’’
ஆணவம் களைந்து, மனம் அழிந்து என்னை நான் அறியும்போது
தேடியதெல்லாம் விட்டுச் செல்லும் குப்பையாய் மாறிட-வாழ்வு
தீர்த்த யாத்திரையானது சச்சத் ஆனந்தம் மலர்ந்தது

உண்மையைச் சொல்ல வார்த்தைகள் இல்லை
வார்த்தை கடந்த வாழ்வினைச் சொல்ல
ஞானியும் இல்லை, மேதையும் இல்லை
உண்மை ஒரு மொழி கடந்த அனுபவம்

மெய்யறிவு சொல்லிட மொழியறிவு போதாது.
அறிவு கடந்த அனுபவம், அனுபவித்தால் புரியும்
ஆணவமழிந்த சரணாகதியில் பிறக்கும் வாழ்வு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-05-23

பெண்ணிய விடுதலையாளர் இயேசு

JESUS WAS A FEMINIST

சம்போகத்திற்கும், சந்ததிக்கும், சமையலுக்கும்
சம்பளமில்லாத அடிமை பெண்மை
பலதாரம் கொண்ட செல்வர் வாழ்வோ சொர்க்கம்
தாரம் இழந்த விதவை வாழ்வோ எரிநரகம்

பாலியற் தொழில் ஆதித்தொழிலான உண்மை
ஆணியத்தால் நாளும் பெண்மை சீரழிய
இன்றும் தொடரும் -ஆணாதிக்க
பாலியல் வன்முறைக் கொடுமை

மானுடரைத் தன் சாயலாகப் படைத்தவனோ
ஆணின் தனிமைத் துயர் போக்க
"ஒருவனுக்கு ஒருத்தி" உண்மைக் காதலே வழி
இதயத்துக்கு காவலான -ஆணின்
இடது விலா என்பிலிருந்தது எழில் நிறை
ஏந்திழையாளைப் படைத்த அர்த்தநாரிஸ்வரன்

தச்சன் மகனாய் பிறந்து
விதவையின் மகனாய்
வளர்ந்து
பெண்ணிய விடுதலைக்காய்
போராடிய மாமனிதன்

ஆன்மீகப் புரட்சி
தனி மனித அகக்கிளர்ச்சி என்ற
புதுமைச்சித்தன்

சடங்கும், சட்டமும்,
பலியுமாய் நாறிட்ட மதத்தை
புரட்சி நெம்புகோலால்
புரட்டிப்போட்டு
அன்பே சிவம் என
முழங்கிய ஆன்மீகவாதி

ஆணும் பெண்ணும் அன்பால் இணைதலே சம்பூரணம்
ஆண், பெண் படைப்பில் உயர்வு தாழ்வில்லை, இருமனம்
இணைந்த வாழ்வே இல்லறம், அறம், பொருள்,
இன்பம் வாழ்வானால் அடையும் வீடோ பெருவரம்

தந்தையாய் தன் மகளை-கன்னிகா தானம் செய்து
மங்கலம் பொங்கிடும் மணவாழ்வை
ஆனந்தமாய் தொடக்கிவைத்து
பல்கிப் பெருகிட ஆசீர் வழங்கிய தேவதந்தை

இறைவா என்னை-அந்நியனாய், ***பெண்ணாய்***
அறியாமை நிறைந்த மூடனாய்ப் படைக்காததற்கு நன்றி
யூத ஆணியத்தின் வேதவழிபாடு
பெண்மையை இழிவு செய்யும் கோட்பாடு

பெண்ணை வாழ்த்துவது பாவம்
நீதி மன்றங்களில்-பெண்மையின் சாட்சி
செல்லாது என்பதோ சாபம்



தோராவைப் பெண்களுக்கு கற்றுக் கொடுப்பதை விட
எரிப்பது மேலானது, தன் மகளுக்கு தோராவை கற்பிப்பவன்
விபச்சாரத்தை கற்பிக்கின்றான்''
இராபாய் எலயசாரின் இழிந்த வாக்கு

பெண்கள், குழந்தைகள், அடிமைகள் ஜெபிக்கவோ
''ஷீமாவை'' உரைக்கவோ உரிமையில்லை-தனக்காக
ஜெபிக்கும் பெண்மீது இறைசாபம் நிலைக்கட்டும்-
சாபமிடும் ''தால்மட்'' சாகா வரம்பெற்ற சட்டமானது

பொது வழிபாட்டுக்கும் , பெண்கள் ஒன்றாய்க்
கூடி ஜெபிப்பதற்கும் தடையான வேதம்
ஊர் ஜெபக்கூடங்களிலும்-ஒழியாத
ஆண்-பெண் பிரிவினை வாதம்

ஜெருசலேம் ஆலயத்திலோ-ஆண்கள் வழிபாட்டு கூடத்திற்கு
ஐந்து படிகளுக்கு கீழே பெண்களின் வழிபாட்டுக்கூடம்,
பஞ்சாகமங்களுக்கு கீழே பெண்கள்
சொல்லாமல் சொல்லிடும் திருச்சட்டம்

பஞ்சணையில் பெண்களோ-மன்னன்
சாலமோனுக்கும், தாவீதிற்கும் மன்மத வேதம்
சாலோமோனின் உன்னதப் பாடலோ தாந்ரீகம்

பெண்களோடும், தன் மனைவி, சகோதரி,
பெண் குழந்தைகளோடும்-இராபாய்
பொதுவிடங்களில் உரையாடுவது அகௌரவம்
மீறி நடப்பவர் மீது இறை சாபமும்
எரி நரகும் சொந்தம் என்பதும் வேதம்

ஜெபக்கூடம் தவிர-வேறு எங்கும் பெண்கள் தனியே
செல்லத் தடை, வீட்டிலும் பெண்கள் வதிவிடம் விட்டு
ஆண்கள் வதிவிடத்திற்கு செல்வது பிழை

பெண்ணிற்கு தந்தை, மனைவிக்கு கணவன்
விதவைக்கு, மைத்துனரே காவல் என்றான நிலை
அறுத்துக் கட்ட ஆண்களுக்கோ பலதாரம்
விதவைக்கு மறுமணம் கிட்டாத வரம்

சீட்டு கொடுத்து-மனைவி சீரழிய-மணவிலக்கு ஆணுக்கு வரமானது
ஆணாதிக்க உலகில் கற்பும், மானமும் மலிவாய் விலை போயிட
பாலியல் ஏழைகளுக்கு வாழ்வாதாரமானது?

ஆசையின் வடிவம்-வதந்தியின் உருவம், சோம்பல்,
பொறாமையின் சொந்தம் பெண்
ஆண் குழந்தையோ சமாதானத்தின் வரம்
பெண்ணோ சொத்துக்கு நஷ்டமான சாபம்

பாரம்பரியமும், கலாச்சாரமும் பூட்டிய
இரும்பு நுகம் சுமந்து பெண்மை சீரழிய-
ஞானி சாலோமோனுக்கு எழுநாறு மனைவியர்-
முந்நூறு வைப்பாட்டிகள்

சம்போகி சாலமோனும் -பெண்ணிய விடுதலைக்கு-
ஞானமாய் உரைத்தது ஏதுமில்லை. ஞானப்பாடலிலும்
தாந்திராவின் மயக்கம், அறம், பொருள் கடந்தும்
காமத்துப்பாலோ தணியாத தாகம், தீராத மோகம்

மீட்பருக்கு தாயாக-மரியாவின் விருப்பத்தை கோரி
பெண்மையின் மேன்மையை போற்றிய இறைவன்
மானுட மீட்பிற்காய்-மீட்பரை கன்னி கருத்தாங்கியதோ
பெண்ணியத்தின் பெருமாட்சி, யுகப்புரட்சி

கருவுற்ற கன்னியை மறைவாய்ப் பிரிந்திட துணிந்தவர்
இறையருளால் மனம்மாறி இருவரையும் ஏற்றதோ
உண்மைக் காதலின் புதுப்புரட்சி

தாயின் மொழி கேட்டு தண்ணீரை இரசமாக்கி
தனயன் புரிந்த முதல் புதுமை-ஒரு பெண்ணின்
மணவாழ்வு மணமிழக்காமல் காத்ததோ
அன்னைக்கு கிடைத்த மகிமை

இயேசுவின் பொதுப்பணிக்கு பொருளும் , ஆதரவும்
வழங்கிய தாய்க்குலம், வீடு, குடும்பம் துறந்து,
வேதம் பயின்று யூத கலாச்சாரத்தை
புறந்தள்ளி , யுகப்புரட்சி செய்த பெண்ணியம்

இறந்த உடலைத் தொடுவதும் , இரத்தப்போக்குள்ள
பெண்ணைத் தொடுவதும் தீட்டாக-இலாசரின் சடலத்தையோ-
விதவையின் மகன் உடலையோ தொடாத மனுமகன்
மரித்த ஜாயிர் மகளை தொட்டு உயிர் கொடுத்து
பெண்மைக்கு மேன்மையளித்த திருமகன்

பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப்போக்கால் துன்புற்று
பணம், பொருள், உடமை எல்லாம் இழந்த ஏழை
தன் ஆடையைத் தொட்டு குணம் பெற

கோதையின் விசுவாசத்தைப் போற்றி
தொட்டு குணமானதை ஊர் அறியக் கூறி
தீட்டையே-தீட்டாக்கி- திருச்சட்டத்திற்கு
சவால் விடுத்த புரட்சியாளன்

காம வடிவாய் பெண்மையைக் கண்ணோக்கி,
விலைமாதை இகழும் பரிசேயருக்கு
விலைமகள் காட்டிய பேரன்பு விலைமதிப்பற்றது,
இறை தந்தையாய் உறவு சொன்ன மனுமகன்

பெண்மையைப் போற்றி-பாவங்களை மன்னித்து
அன்பனாய் அபலையைத் தொட்டுத் தேற்றி
சமாதானத்தை அருளிய தேவன்
பரிசேய வேடதாரிகளைச் சாடிய புனிதன்

ஒழுக்கம் கேள்வியான சமாரியப் பெண்ணோடு
பொதுக் கிணற்றடியில் உரையாடி
“நானே எதிர்பார்த்திருந்த மெஸாயா”
தன்னை அடையாளம் காட்டி-யூத
சம்பிரதாயங்களை தகர்த்த கிளர்ச்சியாளன்

விபச்சாரியை கல் எறிந்து கொல்வது திருச்சட்ட நீதி
அன்பும் மன்னிப்புமோ உம் வழுவாத நீதி
கையும், மெய்யுமாய் பிடிபட்ட விபச்சாரிக்கு
என்ன தண்டனை? சூதும் வாதுமான கேள்வி

குற்றம் சுமத்தியவர்களை -குற்றவாளிகளாக்கி
விபச்சாரிக்கு புதுவாழ்வு வழங்கிய நீதி
கொலை புரியவிருந்த கொடியவரையும் காத்த கருணை
பொதுவிடத்தில் விபச்சாரியோடு உறவாடி
அமைதியை அருளிய கிருபை



மனையியல் மட்டும் மங்கையர் பணியல்ல, அறிவுத்தேடல்
மங்கையருக்கு அவசியம், மார்த்தா உம் தங்கை தேர்ந்தோ
உயர்ந்தது, மரியாளுக்கு இறை வரமானது
காலடியில் அமர்ந்து-இறை வார்த்தையைச்
செவிமடுத்த தங்கையைப் போற்றிய குரு

அன்புச் சகோதரிகளின் கண்ணீரைக்கண்டு
கண்கலங்கிய நண்பன்-மரித்த
இலாசரை எழுப்பி உயிர் கொடுத்து
உயிர்ப்பும், வாழ்வும் நானே என்ற இறைமகன்

குழந்தைகளைத் தூக்கி அணைத்து-ஆசீர் வழங்கி-
அன்னையரோடு உரையாடி உறவு பாராட்டிய அன்பர்
கூனல் அம்மையை-ஓய்வு நாளில் தொட்டு குணமாக்கி
கானானியத் தாயின் விசுவாசத்தை போற்றி
மகளை வார்த்தையால் குணமாக்கிய தேவர்

பத்து நாணயங்களில் ஒன்று தொலைந்திட-சலிக்காது
தேடிக் கண்டுபிடித்த பெண்மை-இறை தன்மை
பெண்மையை, இறைவனோடு ஒப்பிட்ட பெருமை
ஆணிய யூத மதத்திற்கே சவாலான உண்மை

“மணவாழ்வின் நறுமணத்தை” நாறடித்தவளை
மணாளன் விவாகரத்து பண்ணலாமேயன்றி
வேறு காரணங்களுக்காக மனைவியை
விவாகரத்து பண்ணுபவன் “விபச்சாரி”

ஆணாதிக்க கொடுமையை
வன்மையாகச் சாடி-மணவாழ்வின்
பெருமையை போற்றிய புரட்சியாளர்

உம்மைப் பெற்ற உதரமும், பாலூட்டிய கொங்கைளும்
பேறுபெற்றன என தாயைப்-புகழ்ந்தவருக்கு
பெண்கள் குழந்தை பெறும் இயந்திரங்கள் அல்ல
இறைவார்த்தையை கேட்டு கடைப்பிடிப்போர்
அதிலும் உயர்ந்தோர் என தாயின் மேன்மையை
பெண்மையை போற்றிய திருமகன்.

மரித்த பின்னரும் அன்னை மடியில்
இன்பம் காண-குழந்தையாய்
தாய் மடியில் உறங்கிய மனுமகன்

தம் உயிர்ப்பையும் மதலேன் மரியாளுக்கே
முதன் முதலில் வெளிப்படுத்தி-அவர் வழியாய்
சீடருக்கு அறிவித்து-பெண்களுக்கும்
சாட்சியம் பகிரும் உரிமை வழங்கிய பெருமான்,
பெண்ணையும் சீடராய் ஏற்று
பெண் விடுதலையை வாழ்வாக்கிய அம்மான்

மடியில் மகனை தாலாட்டும்போது-அன்னை
முகத்திலே மாறாத ஆனந்தப் புன்னகை அன்று,
மரித்த மகன் உடலை தன் மடியில் கிடத்தியபோது-
நெஞ்சிலோ வெடித்த சோக எரிமலையோ இன்று

இறைவனுக்கு தன்னை அடிமையாக்கி
கல்யாண மாலையின்றி-இறைமகனை கருத்தாங்கிய
கன்னியும் பெண்மையின் புதுப்புரட்சி



கண்ணீரை விழிகளில் ஏந்தி, செந்நீரை இதயத்தில்
தாங்கி, மானுட மீட்பிற்காய் மகனை ஈந்த
தாய்மையிலும் பெண்மையின் பேரெழுச்சி

இயேசுவின் பெண்ணியப் புரட்சி-
பழமைவாத மதச்சம்பிரதாயங்களுக்கும்,
பாரம்பரியங்களுக்கும் பெரும் சவாலானது
பெண் விடுதலைக்காய் நல்மனங்களில் ஏற்றிய
அணையாத தீபமானது.

இறைவனே நம் தந்தை
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-12-10-2023

பிருந்தாவனத்து கோபியர்கள

கணவன் இறந்தபோது பூவும், பொட்டும், தாலியும்
பறிபோனது, வளர்த்து ஆளாக்கிய பிள்ளைகள்
சுமையென ஒதுக்கியபோது, தொப்புள்கொடி
உறவுகளும் தூக்குக் கயிறாய் மாறின

அலைபாயும் மனதுக்குள்-
ஆற்றாமை கண்ணீரை வரவழைக்கும்-
பாலையிலும் கொடிய வெம்மையாய்த்- தனிமை
தாய் நெஞ்சைச் சுட்டெரிக்கும்

பிள்ளைகள் மூட்டிய தீயில்- பெற்ற வயிறு
சுடுகாடாய் பற்றி எரியும்-நாளும் முதுமை, வறுமை
மூத்த உடலை நோயால் கொல்லும்.

விதவைகளாய் வீதிக்கு வந்தவர்கள்
முதுமையிலும் இரந்து வாழ்தல்
செய்த பாபமா? இல்லை இறை சாபமா?

மானம் காத்திட கந்தல் துணிக்கும்- திரௌபதிகளாய்,
மனம் கண்ணனை கூவியழைக்கும்
கஞ்சிக்கும் கூழிற்கும்-நெஞ்சம்-மணிமேகலையின்
அட்சய பாத்திரத்தைத் தேடியலையும்

கோடிகள் செலவில் ஆலய கும்பாபிஷேகங்கள்
கோயில் வாயில்களில்-ஏழைக் குப்பைகள்
குந்தித் தவமிருந்து சில்லறைக்காய்
இரந்து குரல் கொடுக்கும்.

புண்ணிய காசியில், தாயினம் நாதியின்றி
முதுமையில் தள்ளாடி, வறுமையில் வாடி
செத்தபின் தெருநாய்களுக்கு உணவாகும்.

பாவத்தை தொலைத்து புண்ணியம் தேடிட
காசியை நாடும் பக்தர்களுக்கும், பிள்ளைகளுக்கும்
வாடிடும் முதிய தாய்களை பரிவோடு நோக்கிட
நெஞ்சில் ஈரமில்லை-இந்தத் தாய்களிலும்
நடிகைகளின் காமக் கவர்ச்சியில்லை.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-04-2023

பிச்சா பாத்திரம்

ஓட்டைப் பண்டம் என் பிட்சா பாத்திரம்
உருகிக் கரைந்தே ஆயிரம் வாசல் இதயங்களிடம்
அன்புப் பிட்சை கேட்டது

நட்பு, பாசம், காதல் என்றே, பல்வகை
உறவுகளோடு நெஞ்சைப் பகிர்ந்தும்
ஓட்டை இதயம் நிரம்பவில்லை
உள்ளக் குமுறல் ஆறவில்லை

மானிட அன்பினால் நிரம்பாத இதயம்
மறுபடியும் மறுபடியும்-அன்பிற்காய்
ஏங்கித் தவித்தே அழுது களைத்தது:
கண்ணீரோடு உடைந்து நொருங்கி இறைவா
உன் பாதாராவிந்தம் சரணமென்றது.

ஓட்டைப் பண்டம்
உன் அன்புக் கடலில் மூழ்கிப்போயிட
ஓம் சாந்தி- ஓம் சாந்தி- ஓம் சாந்தி
அமைதி ஆட்கொள்ள எங்கும் ஆனந்தமே.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-04-2023

பொன்னூஞ்சல்

அன்னை மடியில் தவழ்ந்தபோது, அன்னையே தெய்வம் என்றான்
கன்னி மடியில் கிடந்தபோது காதலே உலகென்றான்
பருவங்கள் பல மாறிட, சொத்தும் சொந்தமும் பெருகிட
பழுத்த இலை உதிருமுன் வானம் பார்த்தது-பெருமூச்சுடன்
ப்பூ எல்லாம் இவ்வளவுதானா? என்றது

ஓடி உழைத்துத் தேடிய சொத்தும்
உதிரம் பெற்ற செல்வமும்- வாடி விடை சொல்ல
தன்னை அறிந்திடாது
வந்த வழியா போனது-வாழ வந்த ஆன்மா?

ஆடிய ஆட்டமெல்லாம் அந்தரத்தில் கட்டிய ஊஞ்சலில்
சூடிய மலர்கொடியயோ-வாடி பூவும், பொட்டுமிழந்து
விதவைக் கோலத்தில், சாற்றிய மலர்களும்
ஓதிய மந்திரங்களும், சுந்தரனார் திருவடியில்
தனியே , தீயில் வேகும் காயமோ சுடலையில்.

வெள்ளிக் கயிறு அறுந்திட, விழிநீர் வடிந்து,
இதயத்தின் இன்னிசையும், சுவாசத்தில் வீசிய தென்றலும்
ஒன்றாய் ஓய்ந்திட, துள்ளித் திரிந்த உடலும்
தள்ளாடித் தளர்ந்தே அமைதியில் ஆழ்ந்திட
ஆண்டவனைத் தேடிப்போனதோ ஆன்மா?

வந்த வழியும் தெரியவில்லை- வாழ்ந்தபோது வாழ
வழியும் புரியவில்லை, மந்திரங்களும், மதங்களும்
நம்பிக்கை சொல்ல, நலிந்த வாழ்வில் நிம்மதியில்லை-
போகும் வழியும் தெரியவில்லை

வாழ்க்கை என்பது வட்டமா? நேர்கோடா?
ஒன்றுமே புரியவில்லை.? மானுடா
சுருளி வடிவாமா உள்ளுணர்வின் பரிணாமம்?
சத்தியம், சிவம், சுந்தரமாய்ச் சூனியம்-புரியவில்லை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-05-23

பூ

வண்ண இதழ்களோ ஆடையாக
வாசச் சுகந்தமோ பொன்மேனி வாசமாக
அமுதோ, தேவமகள் ஓம்பும் விருந்தாக
புன்னகையணி பூண்டு
பூவையரை மயக்கிடும் பூவையிவள்
வான்மலரோ? தேன்நிலவோ?

பாணணாய்த் தேனீ பண்ணிசைக்க,
தேவகானத்தில் மயங்கிய பூவை
அமுதைப் பரிசாய் வழங்கியே
பாணனை மகிழ்வித்த பூவை

தீ

ஏழைகளின் அடுப்பில் சில வேளை நெருப்பெரியும்
பசித் தீயோ வயிற்றில் மூவேளையும் பற்றி எரியும்
இனவாதத் தீ நாட்டை எரிக்க-அராஜகம்
எரிநரகைத் தோற்றுவிக்கும்

பள்ளிகளையும், கோயில்களையும்
மதவாதம் கொளுத்தி மகிழ்ந்திட-மானுடம்
தேடும் முக்தி எட்டாத வானில் ஒளிர்ந்திட,
தீயில் பிறந்த உலகம் தீக்கிரையாகும் அவலம்.

பகிர்ந்து வாழ்ந்தால் -இரத்தல் ஒழியும்
உழைத்து மகிழ்ந்தால் வறுமை தீரும்.
உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை
தூய மனத்தவருக்கே சத்தியத்தின் பெருமை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-12-04-2023

புல்லாங் குழல்

அந்தி சாய்ந்த நேரம் ஆற்றோரம் அமர்ந்திருந்தேன்
அந்தி மந்தாரையின் வாசம் நெஞ்சை அள்ள
அழகு வானில் வெள்ளி நட்சத்திரங்கள் பூக்கோலங்கள் போட
துள்ளி வரும் பருவ மங்கையாய் அமுதைப் பொழியும் அழகு நிலா

வெண்மேகக் கலிங்கம் களைந்து வெண்ணிலவும் ஆடை மாற்ற
-மொட்டவிழ்த்த அல்லிகளும் முகம் மலர்ந்து காதல் சொல்ல
கட்டழகு நங்கையும் நாணிச் சிவந்தாள்

கானாமிருதமாய்க் காற்றில் கலந்து வந்தது-
கோபாலனின் புல்லாங்குழல் இசை

வெற்றுப் புல்லாங்குழலில் உயிர்க் காற்றின் நடனம்
உள்ளத்தை கொள்ளை கொள்ள
காற்றாடும் பூக்களும்,நீராடும் கயல்களும்
துள்ளி விளையாட எங்கும் ஒரே குதூகலம்

அகங்காரமிழந்த உள்ளம் இசைக்கும் ஜீவகானம்
ஆத்மாவின் கீதமானது-மனமழிந்த
மாசற்ற நிலையில் ஆனந்த கானமிசைக்கும்
வெற்றுப் புல்லாங்குழலே மெய்வாழ்வானது

சூனியத்தின் சுந்தர இனிமைதான்
மானுடத்தின் உண்மைச் சுயம்
மனமழிந்த புனித நிலைதான் இறை நிலை

ஆணவம் கழித்து வெற்றுப் புல்லாங்குழலாய் மாறிட
மனந்திரும்புங்கள்-மனுமகன் அழைக்கின்றார்
உங்களில் தேவராகம் இசைத்திட
உயிர்க் காற்றாய் உலா வருகின்றார்
நீங்களும் தெய்வங்ளே என் இனிய-சகோதரரே.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-5-04-2023

புதிய முகம்.

வெற்றுச் சிலுவை மார்பிலாட-வேதாகம் கையில் வாட
வீதி உலா வரும் போதகர்களே
உங்கள் போதனையால் இனவாதம் குணமானதா?
மதவாதம் மடிந்து, இறையரசு மலர்ந்ததா?

வாடி வீடுகளிலும், நட்சத்திர விடுதிகளிலும்
நல்ல சமாரித்தன் சேவைக்கான மாநாடுகள்
ஓலைக் குடில்களில் அகதிகளின் பிரார்த்தனைகள்

அகதிகள், அனாதைகள், அங்கவீனர், விதவைகள்
எனச் சங்கிலித் தொடராய் நீளும் ஏழைச் சமூகத்தை
மதம் மாற்றுதல்-ஓ மதவியாபாரிகளே
கறுப்புச் சந்தை வியாபாரமே!

ஊரிலே பல பிரிவினைச் சபைகள்-அன்பும்
ஒற்றுமையும் இயேசுவின் மாறாத போதனைகள்
பரிசேயரே உங்கள் வெற்றுச் சிலுவையில்
ஏழைக் கிறிஸ்துவை
அறைவதில் ஏனிந்த ஆனந்த நிலைகள்?

பிற மதங்களைத் தூற்றி மதம் மாற்றுவதில்-முத்தம் கொடுத்து
“இயேசுவை காட்டிக்கொடுத்த” யூதாஸின் முகம்.
இன்றும், முப்பது வெள்ளிக் காசுக்கு
இயேசுவைக் காட்டிக்கொடுக்கும் வியாபாரம்.
போலி ஆன்மீகம்-பவுலின் இரட்சணியப் பிரச்சாரம்

குணமாக்கும் கூட்டங்களால் குணமாகாத மதவாதம்
கொரோனா வாட்டிட சாரமற்ற உப்பான போதகம்
இயேசு வருகிறார்-சீக்கிரம் வருகிறார் ஆண்டுகள்
இரண்டாயிரம் கழிந்தும்-மாறாத
மதப் போலிகளின் ஓயாத மதப்பிரச்சாரம்

உன் கடவுளாகிய ஆண்டவரை
உன் முழு அறிவோடும், உன் முழு இதயத்தோடும்,
உன் முழு ஆற்றலோடும் அன்பு செய்வாயாக
அறியாத வேதம்-அங்கவீனச் சபைகள் ஓதாத மந்திரம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-12-04-2023

புதுமைச் சித்தன் இயேசு

ஆணவத்தின் இறப்பிலும்-விழிப்புணர்வின்
பிறப்பிலும் இறைவன் மலர்ந்திட
கனிந்த பழம் உதிர்ந்திடும் காலம் நெருங்கிட
அறிந்த மனம் தன் அகக்கிளர்ச்சியை தொடங்கியது.

அன்பே கடவுள், பலியை அல்ல இரக்கமே-இறை வேண்டுவது
இறைவன் நம் தந்தை-நீங்கள் என் சகோதரர்
உலகின் ஒளி நீங்கள்-ஒளிருங்கள்

உலகின் உப்பு நீங்கள்-உலகை வளமாக்குங்கள்.
உனக்கு நீயே மீட்பர்-உண்மையே
உங்களுக்கு விடுதலையளிக்கும்

திருச்சட்டத்தை அன்பினால் புடமிட்டு
பலியை ஒதுக்கி, இரக்கத்தைப் போற்றி
ஆசாடபூதிகளைக் கண்டித்த அகக்கிளர்ச்சியாளன்
ஒடுக்கப்பட்ட ஏழை பாவிகளின் நண்பன்

நோயாளிகளுக்கு நலம் ஈந்த சஞ்சீவினி
உம் விசுவாசமே உம்மைக் குணமாக்கிற்று
இருப்பையும் உம்மையும் இணைக்கும் பாலமே நான்
அமைதியை அருளிய அருட் செல்வம்

கடல் மேல் நடந்து காற்றையும், கடலையும்
அடக்கியது, உலகில் வாழ்ந்தாலும்-உன்னுள்
உலகு வாழ அனுமதியாதே-முழங்கியது

என் நேரம் இன்னமும் வரவில்லை-எல்லாம்
பிரபஞ்ச லீலை, அறிந்த மனம் புரிந்துணர்வோடு
அனைத்தையும் ஆம் என்றே ஏற்றது
மரணத்திற்கும் -என் சித்தமன்று-தந்தையே
உம் சித்தம் என்றே தன்னைக் கையளித்தது

பரிபூரண சரணாகதியே வழி-சிலுவையிலும்
தன்னை எரித்தே ஒளிர்ந்த வாழும் கலையான ஒளி
அன்பே சிவம் என்ற தந்தையின் மொழி

பொதுவாழ்க்கை முடிவுக்கு வர, கனிந்த பழம் உதிர்ந்தது
விழிப்புணர்வெனும், பெருங்கடலில் தோன்றிய
பேரலை மறைந்தது, அலையும், கடலும் வேறல்ல
ஒன்றென்று, விழித்த மனம் அக்களித்தது

விழிப்புணர்வுக்கு இறப்பேது
உடல் பிறந்து- உடல் மடியும் உலகில்
உடல் கழித்திட- ஒளிரும் அழியாத
சின்மயனாய் அவதார புருஷர்கள்



விழிப்புணர்வை தூண்டிட
ஆணவமழித்து புது வாழ்வு வாழ
அகக்கிளர்ச்சியாளனாய்
அவர் வாழ்வும் போதனையும்

கிறிஸ்து என்னில் மலராதவரைக்கும்
அநாமதேயன் நான், பிறந்து இறந்து-
வாழ்வுச் சக்கரத்தில், மூப்பு. பிணி. சாவு
வாட்ட, வாடும் நடைப் பிணம் நான்

நான் குன்றிக் குறுகி மடிய வேண்டும்
என்னில் கிறிஸ்து என்னும் பேரொளி
ஓங்கி உயர்ந்து ஒளிரவேண்டும்

வாழ்வே தவமானால் -நிலை வாழ்வு வரமாகும்
சத்திய தரிசனம் நமதாகும்

அன்பே சிவம்-வாழ்வே தவம்
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-12-10-2023

புயலிலாடும் பூக்கள்

கைமை விலங்காகித் தூக்குக் கயிறானால்
தாயே நீயும் -தாலி கட்டிக்கொள், வெண்ணாடை
களைந்து-வண்ணக் கூறை அணிந்திடத் துணிந்து நில்
எழுக பெண்ணினமே
தங்கத்தாலியையும்-புது கூறையையும்
மீண்டும் அணிந்திட எழுக தாய்க்குலமே

இதயமணியாத எந்தத் தாலியும்
இரும்புத் தளைகளே
உதயம் தராத சூரியபுருஷர்களும்
செத்த கோள்களே

புரட்சி மலர்ந்திட பூமனதில் புதிய எழுச்சி கொள்க-
பழைமை உன் பாதைக்குத் தடைக் கல்லானால்-மிதித்து நட,
பண்பாடு உன் கழுத்துக்குச் சுருக்குக் கயிறானால்-அறுத்து எறி

புல்லல்ல நீ -உன்னைக் கிள்ளி எறிந்திட
புழுவல்ல நீ தூண்டில் புழுவாக
போகமல்ல நீ ஆணினம் அனுபவித்திட
அடங்கி வாழ்ந்திட அடிமையல்ல நீ.

பெண்ணே எழுந்து நில்-துணிந்து செல்
ஒரு முறைதான் வாழ்வு, ஒரு முறைதான் சாவு
வாழ்வு உன் கையில்

வெண்புறாவே உன் சுதந்திரச் சிறகை விரித்துப் பற
வானமே உன் எல்லை
வண்ண ரோஜாவே உன் வேர்களை ஆழப்பதி
பூமியே உன் கால்மனை

விண்ணை முட்டட்டும்-உன் விடுதலைக் கோஷம்
காற்றில் கலக்கட்டும் உன் பூவாசம்
வானமே உன் அரியணை-பூமியே உன் கால்மனை

கத்தும் கடழேலும் உனக்கு முழங்காலளவே. கனலாய் உருகும்
எரிமலைக் குழம்பும்-நீ பூசிடச் சந்தனமே
புயலும் உனக்கு பூங்காற்றே, பேரிடியும் உனக்கு
சங்கீதமே-தாய்குலமே புரட்சிப் பெண்ணாய் எழுக
புதுமைப் பெண்ணாய் மலர்க

கல்வியெனும் ஒளிவிளக்கை கையில் ஏந்தி
கால் விலங்கெனும் சீதனத்தை
உடைத்துத் தூர எறி

உன் விருப்பின்றி தாலியும் விலங்காகும்போது,
பொறுப்பின்றி உன்னுடலை போகமாக்கும்போதும்,
விண்மீன் வானத்து வெண்நிலவே
சுட்டெரிக்கும் செஞ்சூரியனாய் நீ மாறு!
செந்தேன் மலர்வனத்து பூங்காற்றே
சுழன்றடிக்கும் சூறாவளியாய் நீ வீசு!

வானமே உன் எல்லை,
சுதந்திரக்காற்றே உன் உயிர் மூச்சு
வாழ்வு உன் கையில்
இன்றே வாழ்க! நன்றே வாழ்க!

சீதையால் எரிந்தது இலங்காபுரி
பாஞ்சாலியால் அழிந்தது கௌரவ குலம்
கண்ணகியால் எரிந்தது மதுரை
தாய்களே உங்கள் கண்ணீரால்
அழியட்டும் அதர்மம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-13-04-2023

றொகின்ஜா குடியினர்

கலைமான்களை வேட்டையாடிப், புள்ளிமான்களை வல்லுறவு செய்து
வாழிடத்தையும், வாழ்வாதாரத்தையும் எரித்தழித்து
இன அழிப்புச்செய்யும்-பௌத்த பேரினவாத மியன்மார்
இராணுவத்தின் கொடுமைகள் உலகை உசுப்பிய நேரம்

உயிர் பிழைக்க, உடுத்திய துணியோடும்-இராணுவம்
சூட்டிய "பயங்கரவாதிப்" பட்டத்தோடும் தப்பி ஓடி
உயிரிழந்த, உறவுகளை வழியில் புதைத்து
வல்ல அல்லாவை நொந்து தொழுது-வாய்விட்டழுது
மழையும், பசியும், பயமும், பிணியும் வாட்டி வருத்த
பங்களாதேஷை அகதிகளாய் வந்தடைந்த
றொகின்ஜா முஸ்லீம்களோ ஆறு இலட்சம

மானுடத்தை அழித்திடும் -இனவாதம், மதவாதம் எல்லாம்
பயங்கரவாதமே, ஆங்சான் சூச்சியின் வாதங்கள் மனிதத்தையும்,
பௌத்தத்தையும் பழித்திடும் விதண்டாவாதங்களே
சமாதானப் பரிசும், அம்மையாரின் அரசியல்
சூதாட்டத்தில் கிடைத்த அதிஷ்டலாபப் பரிசே?

அகதிகளின் விழிகளிலோ ஓயாத கண்ணீர்
எல்லைகளிலோ அச்சுறுத்தும் தூங்காத நிலக்கண்ணி
இனச்சுத்திகரிப்பின் பாடப்புத்தகம் இதுவென
மனித உரிமை அமைப்புக்கள் கண்டிக்க,
மாற்றுடைக்கும், மருந்துக்கும் பிடி சோற்றுக்கும்-கையேந்தி
மரநிழலில் இணையிழந்த, மனமொடிந்த மாங்குயில்கள்
கூடு கட்டி கண்ணீரில் தவமியற்றும் வங்காளி முஸ்லீம்கள்

பிரித் ஒலியோ புத்தர் சிலையில் மோதி எதிரொலிக்க
வாங்கொலியோ வானவெளியில் அல்லாவைக் கூவிக்களைக்க
ஆஸ்திகவாதிகளால் துரத்துண்ட இறைவனும்
நாஸ்திகவாதிகளிடம் புகலிடம் தேடி அகதியாய்த் தவிக்க
கண்ணீரை தெளித்து, ஒப்பாரியால்-தூங்கிடும்
இறைவனை தட்டி எழுப்பும் அகதிகள்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-09-05-23

துறவியும் சீடரும்

பெய்யும் மழையும்-வையகத்தை மிரளவைக்கும் பிரளயமாக,
வீசும் காற்றும்-மலையையும், மரங்களையும் அசைத்திடும்
சண்டமாருதமாக, வெட்டும் மின்னலும் வெடிக்கும் பேரிடியும்
அச்சுறுத்தும் கொடும் அரக்கனாக-நெடும் பயணத்தில்-
பசியும் களைப்பும் வருத்தும் வழித்துணையாக, ஈர உடையும் -
களைத்த உடலும் சிலுவையாக, பிரான்சிஸ் அசிசியும்
சீடர் லியோவும் தொடர்ந்த பயணம்

குரு வினவினார் தம் சீடரிடம்
லியோ மெய்யான துறவி யார்?

அந்தகர்க்கு பார்வையளிப்பவரோ?
நோயைக் குணப்படுத்துபவரோ?
மாண்டவரை உயிர்ப்பிப்பவரோ? இல்லை-
இவர்கள் உண்மையான துறவிகள் அல்ல

மண்ணின் மொழியும், மரங்களின் மொழியும்
விண்ணின் மொழியும், விலங்கினங்களின் மொழியும்
அறிந்தவரோ அல்ல-விளங்கமுடியாப்
பிரபஞ்ச ஞானம் பெற்வரும் துறவி அல்ல

அமைதி நிலவிட குருவும் சீடரும் நடந்தனர்.
அடையும் நகரோ தொலைவில் ஒளிர்நதிட
-பிரான்சிஸ் மொழிந்தார்
சொத்தும் சுகமும் துறந்தவரும் துறவி அல்ல

பசியும் களைப்பும் வாட்டிட-சீடர் கேட்டார்
அப்படியென்றால் யார்தான் உண்மைத் துறவி?

ஊரை நெருங்கிவிட்டோம்-வரவேற்க எமக்கோ உறவுகள்
யாருமில்லை, விடாமல் விடுதியின் கதவுகளை தட்டி
பசியாற உணவும், களைப்பாற இடமும் கேட்போம்
உம் உறவுகள் ஏழைகள் இருவர்
அருள் கூர்ந்து இரங்குங்கள் என்று இரந்து கேட்போம்

விடுதி உரிமையாளரோ பிச்சைகாரர்களே, யாசகர்களே
இரந்துண்ணும் சோம்பேறிகளே உணவில்லை,
உறங்க இடமில்லை இங்கிருந்து ஓடி விடுங்கள்
என்று எம்மை விரட்டிக் கதவைச் சாத்துவார்

மழையும் புயலும், சேறும் சகதியும்,
பசியும் களைப்பும், எம்மை வாட்டிட
மீண்டும் தட்டுவோம் மனமிரங்கித் திறப்பார்
எம்மையும் விருந்தாய் மனமுவந்து ஏற்பார் என்று

உரிமையாளரோ தடி கொண்டு எம்மை விரட்டி
தடிப்பயல்களே போக்கிரிகளே
நள்ளிரவில் தொந்தரவு செய்யாமல் போய்விடுங்கள்
என்று மீண்டும் கதவையடைப்பார்

ஒன்றும் தோன்றாத நிலையில்-மனம் அழிந்து
சூனியத்தில் இலயிக்க- இருமை கடந்த தூய மனம்-
பிரபுவாய் விடுதி உரிமையாளரைத் துதிக்கத்
தோன்றும் உளநிலையே
உண்மைத் துறவு நிலை-சந்நியாசம்

எச் சூழலிலும் எவ்விடர் நேரிடினும்
அமைதியும் எளிமையும்
அகங்கார நிலையழிந்த அன்பு நிலையுமே
மெய்யான துறவு நிலை-
அறிவாய் லியோ-அன்புடன் பகர்ந்தே
நடந்தார் பிரான்சிஸ் அசிசி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra

சாத்தானின் வேதம்

குண்டர்களை வைத்து மக்களை மிரட்டிய தாதாக்களும்,
தொண்டர்களை வைத்து மக்களை ஆண்ட கட்சித் தலைவர்களும்,
ஆயுதங்களால் மக்களை அச்சுறுத்திய பயங்கரவாதிகளும்,
மெல்ல மறைந்து போக, வேதாகமத்தை காட்டி
விசுவாசிகளை மிரட்டிடும் பசுத்தோல் போர்த்திய ஓநாய்கள்
எதிர்க் கிறிஸ்துக்களாய் தோன்றிடும் காலமிதோ?

சிறுவர் துஷ்பிரயோகமும், வத்திக்கான் வங்கியின் நிதி மோசடிகளும்
திருச்சபையை நாறடிக்க, விரிகுழலும், வெண்ணங்கியும்
வேதாகமும், செபமாலையும் தரித்த வேடதாரிகள்-வேதமோதி,
பாவி நீ எனும் குற்றவுணர்வை மக்கள் நெஞ்சில் பதித்து
மானுடத்தை மனோரீதியில் முடமாக்கிடும்
மதவாதத் தந்திரங்கள் சாத்தானின் வேதங்களோ?.

மதவெறி பிடித்த சவுல்கள் -பவுல்களாய் மாறினாலும்
மனதிலோ தீராத மதவெறி
பிறரைப் பாவியாக்கி மண்டியிடவைக்கும்
தீராத மதவாத நோயின் அறிகுறி

வெற்றுச் சடங்குகளாலும், வீண் ஆடம்பரங்களாலும்
பட்டுப்போன ஆன்மீகம், சாரமற்ற உப்பாய்,
காய்க்காத அத்திமரமாய் மாறிட, விசுவாசிகளை அச்சுறுத்த
துண்டுப்பிரசுரங்களோடு “ புதிய யோனாக்கள்”

இன்றும் இவரிடையே-யார் பெரியவன் என்ற ஓயாத போட்டி
முத்தமிட்டுக் காட்டிக்கொடுத்த யூதாஸ் ஸ்கரியோத்தாய்
மும்முறை மறுதலித்த பேதுறுவாய்-கைவிட்டு
உயிர் தப்பிய சீடர்களாய்ப் பலபரிணாமங்கள்

செய்யாத பாவங்களை மக்கள் தோள் சுமத்தி
சிலுவையில் அறையக்-கைபாசின்
புனித பூஜைகள், கபடத்தனமான நீண்ட
செபமாலைப் பிராத்தனைகள்.

பலியை அல்ல இரக்கத்தை விரும்பும் இறைவனை
இம்மானுவேலாய் நம்மிடையே குடியிருக்கும் தந்தையை
எரிநரகில் வாட்டும் கொடிய அரக்கனாய் மாற்றிடும் வேதம்
சாத்தானின் வேதமே! இவரும் எதிர்க்கிறிஸ்துவோ!

பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகின்றீர்களோ
அதையே நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள் என்னும் பொன்விதி
வேண்டாத போதனையானது.

பணம் பறித்திட அனனியா, சப்பிராவை அச்சுறுத்தும்
பேதுறுவின் கோலத்தில் தேவதாஸீகள் (அப்.நட.5-1-9)
என்னிடம் பொன்னோ, வெள்ளியோ இல்லை (அப்.ந.3-6)
என்றவர் வாரிசுகளோ-இன்று
பெரும் சொத்துடமைச் செல்வர்கள்

உன் சகோதரன் குற்றம் புரிந்தால்
ஏழுமுறை எழுபது மன்னிப்பாய் (மத்.18-21-23)
என சொன்னவர் சீடர் மன்னிக்க மறந்திட
எதிரியை மன்னிக்க சொன்ன குருவும்
தம் சீடர் குற்றங்களுக்காய் மீண்டும்
ஒரு முறை சிலுவை சுமந்திட
இறை தந்தையை இரந்து நிற்கும் அவலம்
ஆண்டவரே, ஆண்டவரே என சொல்பவர் எல்லாம்
விண்ணரசு செல்வதில்லை மாறாத மந்திரம் (மத்.5-21-22)

அத்தி மரத்தினிலோ அடர்ந்த கிளைகள்- பழுங்களைக் காணோம்
உப்பினிலோ சாரமில்லை- சீடத்துவத்தை காணோம்
ஏழ்மை, கற்பு, கீழ்படிதல் வெற்று வாக்குதத்தங்களாக
குருத்துவத்தில் ஏரோதுக்கள், சிலுவையிலோ இயேசு-
ஏரோதியாள் மடியினிலோ சீடர்

இறை தந்தைக்கும் மகனிற்கும் இடையில் இடைத்தரகர்களாய்
வேடதாரிக் குருக்கள் இறைகருணையை இழிவுபடுத்தி,
எரிநரகை உயிர்ப்பித்து மந்தைகளாய், சிந்திக்க மறந்த
அடிமைகளாய் விசுவாசிகளை வாழவைத்து
வேதமோதும் சாத்தானாய் எதிர்க் கிறிஸ்துக்கள்.

தந்தையே!, அறிந்து செய்யும் இவர் பிழைகளை
எல்லோரும் அறியச்செய்யும், தூங்கிடும்
மானுடம் விழித்திட, உண்மை ஜெயித்திட
உண்மையே உங்களுக்கு விடுதலையளிக்கும்
மதம் கடந்து மானுடம் புரிந்திட அருள் புரியும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-09-05-23

சாதிகள் இல்லையடி பாப்பா

பருக நீர் கேட்டவரிடம், ஊர் கேட்டார்,
பெயர் கேட்டார், சாதியும், சகலமும் அறிந்தவர்
வேலிக்கு வெளியே நிற்கவைத்து,
மூக்குப்பேணியில் நீர் கொடுக்கின்றார்,
ஈரமனம் படைத்த உயர்சாதி சைவவேளாளர்.

வாக்கு கேட்கச் சேரி வந்த வேளாளரும்,
"இழிந்தசாதி" தந்த நீரை பருகாமல்-தந்திரமாய்
இளநீர் கேட்டு தீட்டைத் தவிர்க்கின்றார்-மந்திரமாய்
"நாம் தமிழர் என்று" இனவாதம் பேசி ,
ஏமாற்றி வாக்கைக் குவிக்கின்றார்.

சாதியம் அடக்கியாளத் தோள் துண்டை இடுப்பில் கட்டி,
ஐயா, சாமி என தொழுது கும்பிட்டுக் குனிந்த ஜாதி-நிமிர்ந்து
எழுந்திட வழியின்றிக் கூனிக்கிடக்க, ஏழைகளின் முதுகில் ஏறி
ஜாதிய அரியணையில் அமர்ந்த ஜாதி,
இன்றும் சுகமாய் அடக்கி ஆண்டு அனுபவிக்கும் அநீதி

ஆலயமும் உயர் சாதிக்கே
ஆளும் உரிமையும் வெள்ளாளருக்கே-கரையார்
பறையர், பள்ளர், நளவர், வண்ணான் தாழ்ந்த சாதி
பறை சாற்று தமிழா- சாதிகள் உண்டென்ற நீதி
பார்பன வேதம் சொன்ன அநீதி

என்று ஒழியும் இந்த சாதியக்கொடுமை என்று மலரும்
ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற
மூத்த குடியின் பெருமை!.

சாதியக் குருடரும் பார்வை பெற
விழி கொடுப்பது யாரோ? மனங்களில்
விழிப்புணர்வு என்னும் ஒளி ஏற்றுவது எவரோ?
மதம் மாறியும் மாறாத சாதியம்
சிங்களம் ஒடுக்கியும் விழிக்காத தமிழினம்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-09-05-23

சாதி ஒன்றொழிய வேறில்லை

ஓ என் தேசமே!
இனவாத, மதவாத, பிரதேச வாதங்களால்
இரத்தக் கறைபடிந்த தாயகமே!

கங்கைகளும், காயாத நதிகளும் பாய்ந்தும்,
காவேரிக்காய்த் தவமிருக்கும் தமிழகம்,
புத்தர்களும், அவதாரபுருஷர்களும்,
ஞானிகளும், மகாத்மாக்களும் தோன்றியும்
மறையாத சாதியம், மதவாதம், இனவாதம்.

சாதியச் சிறையில் தாழ்த்தப்பட்ட மானுடம் ,
கோவனத்தைப் பறிகொடுக்கும் நிலையில்
பரமாத்மாவை இரந்த கூவியும்-பாஞ்சாலிக்கு
பல முழச் சேலை கொடுத்தவரின் பாராமுகம்
எம்மை வருத்தத்தில் ஆழ்த்துகின்றது.
நாம் பாஞ்சாலி அல்லவே வெறும் பறையச்சி.

மானுடத்தை பிளவுபடுத்தி சிறுமைப்படுத்தி, அடிமைப்படுத்தி
மனித உரிமைகளை மீறும் குற்றம் சாதியம்.

எளியமானுடத்தின் தோள்களில் சாதியச் சிலுவையைச் சுமத்தி
கால்களிலோ இரும்புத்தளையை பூட்டி, ஏற்றிய பாரச்சுமை நசுக்கிட
சாதிய அடையாளங்களால் படுகுழியில் தள்ளப்பட்ட மானுடம்
எழுந்து நிற்க ஒரு காலம் வருமோ?

இல்லாமையால் வறுமையுற்று,
கல்லாமையால் சிறுமையுற்ற மானுடம்
சாதியச்சிறையில் காலமெல்லாம் வாடுவதோ?

செய்யும் தொழிலே தெய்வம் என்றாள் -
நாமும் தேவர்களே! உழுதுண்டு வாழ்ந்திட
நிலமிருந்தால் எம்மையும் தொழுதிருப்பர்,
எழுத்தறிவிக்க கல்வி கற்றிருந்தால்
நாமும் இறைவனாகியிருப்போம்

செய்யும் தொழிலே தெய்வம் என்று வாழும் கர்மயோகி
எப்படி இழிந்த சாதியாகும்-ஆடை வெளுக்கச் சவர்க்காரம்
சாதிய மனம் வெளுக்க சநாதன தர்மம் போதாத வேதம்
பௌத்த தர்மமே சாதியம் கடந்த நீதியான ஞானம்

நந்தனார், கண்ணப்பநாயனார், டாக்டர் அம்பேத்காா
எல்லாம் சாதி கடந்து பூத்த வாசமலர்களே!
சாதிக் கொடுமையில் தீய்ந்தும் வேகாத
புண்ணிய ஆத்மாக்களே!

ஓ தேசபிதாவே தாழ்த்தப்பட்ட மக்களுக்காய்
உன் மேலாடையை தியாகம் செய்து-ஹரிஜனன் -
கடவுளின் பிள்ளை என்று எம்மை அழைத்தாய்
அம்பேத்காரின் கோரிக்கையை ஏற்க மறுத்தாய்

அரை நிர்வாணப்பக்கிரியே, மேலாடை துறந்தும்
எமக்கு மேன்மையில்லை, கீழ்சாதி பெயரரைத்தவிர
வேறு பெயரும் எமக்கில்லை,கோவனத்தை பறிகொடுக்கும்
ஏழ்மை நிலையில் ஹரிஜனன் நாங்கள்.

ஆதிசங்கரரே அஹம் பிரம்ம அஸ்மி
அழியும் உடலா? அழிவற்ற ஆன்மாவா?
எல்லோர் உள்ளும் இருப்பது ஆன்மா என்றால்
கோபாலக் கிருஷ்ணா ஏனிந்த ஜாதி

இறக்கைகள் இருந்தும் பறந்திட வழியில்லை
சாதியக் கூண்டுக்குள்-சிறையுண்ட பறவைகள் நாம்
இதழ்கள் இருந்தும் மலர்ந்திட வழியில்லை
மனுஸ்மிருதி மூட்டிய தீயில்
நாளும் வேகும் சூத்திரர் நாம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-09-05-23

சத்திய வேள்வி

ஓ நாளைய யுக புருஷர்களே- வாருங்கள்
அக இருள் ஒழித்து புது ஒளி பிறந்திட
ஒன்றினைந்து சத்திய வேள்வி ஒன்றை யாப்போம்

ஒடுக்கப்பட்ட மனிதம் விடுதலைபெற, உலகம் அமைதிபெற
நசுக்கப்பட்ட மனித உரிமைகள் துளிர்த்து எழு
சாதி, இன மத மொழி, நிற பேதங்கள் மறைந்திட
வாருங்கள் யாப்போம் சத்திய வேள்வி ஒன்றை

ஒன்றே குலம் ஒருவனே தேவன்
யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று முழங்கி
பிரிவினைச் சுவர்களைத் தகர்த்து
ஒன்றுமைக்குக் குரல் கொடுப்போம்.

எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற விழிப்புணர்வோடு
விழாவெடுப்போம்-யாம் பெற்ற இன்பம்
பெறுக வையகம் என்றே குதூகலிப்போம்

நாளைய உலகம் நீங்கள், செழித்த மண்ணே,
புதிய பூமியே, தூய மனமே- உன்னில்
நம்பிக்கை விதைகளைத் தூவுகின்றேன்

சாதி, மத, இன, மொழி நிற பேதம் கடந்து
நிமிர்ந்து நிற்க-குருஷேத்திர யுத்தத்தில்
சத்திய புருஷர்களாய்ப் போராடி ஜெயிக்க
அழைப்பு இது, அறைகூவல் இது

வாருங்கள் குழந்தைகளே
உங்கள் இதயத்தின் குரலைக் கேளுங்கள்
ஆய்ந்து உண்மையை அனுபூதியில் உணருங்கள்
வாழ்ந்து உண்மைக்குச் சாட்சியாகுங்கள்.

“நான்” அழிந்து “நாமாக” வாழ
இன்பமே சூழ்க எல்லோரும் இன்புற்றிருக்க
இருப்பதை இல்லாதவரோடு பகிர்வோம்
எல்லா உயிர்களும் நலமோடு வாழ
நாளும் வாழ்வால் பிரார்த்தனை செய்வோம்.

நாம் எல்லோரும் இறை மக்களே-சகோதரர்களே
நாமே தெய்வம் நம்முள் உணர்வோம்.
அன்பே தெய்வம், வாய்மையோ தெய்வீகம்,
அகிம்சையே பாதை-முன் செல்வோம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-09-05-23

சத்தியம்

ஆதியிலே வார்த்தை இருந்தது
ஆதியாம் கடவுளோடு இருந்தது
அது கடவளாயிருந்தது
இருளில் அது ஒளிர்ந்தது

மனுவுருவாகி மண்ணிற்கு வாழ்வுதர
வந்த வார்த்தை
வழியும், உண்மையும் வாழ்வும் நானே
என வாழ்ந்து காட்டிய வாழும் கலை

உண்மைக்குச் சாட்சியமான வாழ்வை
பொய்மை எதிர்த்தது, சிலுவையில் அறைந்தது.
சத்தியம் சாவதில்லை-பொய்மை தோற்றிட
சத்தியமோ சுடர் வீசி -பல கோடி
சூரியனாய்ப் ஜொலித்தது.

உண்மையின் எழுச்சியே உயிர்ப்பு
உறங்கிடும் மானுடத்திற்கு புத்துயிர்ப்பு
மதங்களோ உரிமை கொண்டாடி
உண்மைக்குப் பொருள் கொடுத்து மலிந்து நலிந்திட
மானுடம் பிளவுண்டுபோனது.

அனுபூதியால் அறிவதே உண்மை
அதைச் சொல்ல வார்த்தைகள் இலலை
வார்த்தை கடந்த அனுபவத்தை விபரிக்க
வார்த்தைகள் இல்லை
ஞானிகளின் மொழி மௌனமே

மெய்யறிவே உண்மையின் அனுபவம்
அதுவே நிலை வாழ்வு-இருமை கடந்த பயணம்
கட உள் ஆகும் அனுபவம்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-09-05-23

சாட்டையும் சிலுவையும்



காரிருள் சூழ்ந்து கள்வர் குகையான ஆலயம், இறையொளியால்
இறையில்லமாகிட, மனுமகனின் சத்திய தாண்டவம்
ஆத்திரம் கொண்ட திருச்சங்கம்-மனு
புத்திரனைக் கொல்ல ஆடிய ருத்திரதாண்டவம்

மறைநூல் வாக்கும் நிறைவேறிட
ஆன்மீகப் புரட்சியின் புது வடிவம் அரங்கேறிட
இறைமகனாய் மனுமகனின் உருமாற்றம்

ஓசான்னா பாடி, ஒலிவக் கிளைகளை அசைத்து
ஆர்ப்பரித்து வரவேற்ற கூட்டம்
அண்ணலின் தோற்றம் பொங்கும் எரிமலையாக
அச்சத்தில் உறைந்த திருச்சங்கம்

கள்வர் குகையான ஆலயத்தை
ஆன்மா-லயம் பெறும் இறை-இல்லமாக்கிய குடமுழுக்கு
திருச்சங்கத்தின் அதிகார அகநிர்வாணத்தை சாடிய
அகக்கிளர்ச்சியாளனின் புரட்சித் திருமுழுக்கு

சாட்டையடி கொடுத்து சாடியவருக்கு
சாட்டையால் அடித்து, மரணத்தை பரிசாக்கி
சாந்தி கண்ட வஞ்சகர் கூட்டமோ திருச்சங்கம்.

ஆன்மீகப் புரட்சி தொடராமலிருக்க-
ஆலயக்கோபுரங்களில் ‘‘வெற்றுச் சிலுவைகள்’’
இயேசுவை அச்சுறுத்திடும் புதிய திருச்சங்கமாய்
நாளும் போலித்திருச்சபைகள்

கள்வர் குகையான ஆலயங்கள், களியாட்டங்களாய்
விழாக்களும், திருப்பலிகளும், முப்பது
வெள்ளிக்காய் பேரங்கள்
முத்தமிட்டு காட்டிக் கொடுக்கும் துரோகங்கள்
அறியேன் என மறுதலிக்கும் அவலங்கள்

மகனை அனுப்பிடத் தந்தைக்கோ மனமில்லை
இறைமகனுக்கு சாட்சியாய் வாழ,
கிறிஸ்தவர்களுக்குத் துணிவில்லை,
தூய மனமில்லை

“யூதத்தை” விலக்கி- வழி தவறிய
“கிறிஸ்தவர்களை” ஒதுக்கி, அல்குரானை வழங்கி-
இஸ்லாதைத் தேர்ந்த “*யாவே*” வாடுகின்றார்?

“அல்லாகு அக்பர்” ஐவேளை கோஷமானது
அச்சுறுத்தும் தீவிரவாதம் புதிய மார்க்கமானது
பயங்கரவாதம் புனிதப்போரானது
பாரோ , யாவே யுத்தம் தொடர்கதையானது



ஊர்களும்-ஒன்றாய் கூடித் தொழுதிடும்
மசூதிகளும் அதிர்ந்திட குண்டுச்சத்தம்
புனிதப்போரை நியாயப்படுத்தும்
புதிய வேதத்தின் வாங்கொலிகளில் மனித இரத்தம்

அழுகைச்சுவராய் உருவழிந்த ஆலயத்தை தாண்டி
அழுது புலம்பும் பாலஸ்தீனியத் தாய்கள்
பாரோவாய் மாறிய யூதர்கள்-***இஸ்ரேலிய***
அடிமைகளாய் துன்புறும் பாலஸ்தீனர்கள்

வாக்களிக்கப்பட்ட பூமியெங்கும் வன்முறைகள்
பாலும் தேனும் ஓடாத பாலையில்-நாளும் ஓடும்
யூத-பாலஸ்தீனிய இரத்தங்கள்

“ஆபேலின் இரத்தம்”
“யாவேயையும்” “அல்லாவையும்”
ஒன்றாய்க் கூவி அழைத்திடும் அவலங்கள்

இஸ்மாயீல்-ஈசாக்கின் சந்ததி, தீராப் பகையோடு
நாளும் மோதிட, விவிலியமும்-அல்குரானும் சாரமிழந்த
உப்பாய்ச்-சாக்கடலாய் மாறிட
உண்மை கடந்த மானுட கற்பனையில் பிறந்த
“வேதங்களின் நிர்வாணங்கள்”?

அறுபது இலட்சம் யூதர்களை கொன்றழித்த
ஹிட்லர் அராஜகவாதி
வாளாவிருந்த யாவேயின் இறை நீதி?

விடுதலைப்பயணம் புராணந்தானோ?
விவிலியம் செல்லாக் காசுதானோ?
சிலுவைப்போர், ஜிஹாத் நியாயம்தானோ?

சியோனிஸம் நாளும் பலம் கொள்ள
“*அணுவாயுத பொற்கன்று குட்டியை*
ஆராதனை செய்யும் “விசுவாச” அவலங்கள்.

புரட்சியாளன் மார்ட்டின் லூதர்
திருச்சபையின் மறுமலர்ச்சியின் புனிதன்
புரட்சியை ஒடுக்கிய கத்தோலிக்க திருச்சபை
புதிய திருச்சங்கமோ? எதிர்க் கிறிஸ்துவோ?

“அடிமைத்தனத்தை நியாயாப்படுத்தும்”-பவுலின்
அசிங்க வியாக்கியானங்கள் -“ சாத்தானின் வேதங்களே”
அமெரிக்க மண்ணில் -கறுப்பு மனிதர்களின்
வாழ்வை எரிநரகாக்கி-புதிய இயேசுவாய்
அறையப்பட்ட கொடூரங்கள் பாரோவின் அநீதிகளே?

“வேதமே கொடிய பாரோவாகிட
அமுதமே, ஆலகாலமாகி” கறுப்பினத்தை
ஆண்டுகள் 246 அடிமைகளாக்கிய வரலாறு(1619-1865)
கிறிஸ்தவத்தின் சாபமே- கொடிய பாவமே

ஆபிரகாம் லிங்கனும் புதிய மோசேயாகி
அடிமைத்தனத்தை ஒழித்து-நாற்பது இலட்சம்
கறுப்பு அடிமைகளை விடுவித்த
புதிய விடுதலைப் பயண வரலாறு அதிசயமே

தொழிலாளி வர்க்கத்தை“அடிமைகளாய் இழிவுபடுத்தி”
உழைப்பை சுரண்டும் முதலாளிவர்க்கத்தை
ஆண்டவனாய்ப் புனிதப்படுத்தி, ஆண்டான்- அடிமை
வர்க்கபேதத்தை நியாயப்படுத்தும்
முதலாளித்துவ பவுலடிகள் திருச்சபையில் “ புனிதர்”

பொதுவுடமைக்கும், சமத்துவத்திற்கும்
உழைக்கும் தொழிலாளி வர்க்கத்திற்கும்
ஓயாது குரல் கொடுத்த ***மீட்பர்*** -கம்யூனிஸவாதி
கார்ல்மாக்ஸ்– திருச்சபைக்கோ நாஸ்திகர்

அபினும், போதையுமான மதம், இரக்கத்தை புறந்தள்ளி-
பலியை ஏற்கும் அரக்கனாய் இறைவனின் குணம்?

“கம்யூனிஸம்” காலாவதியாகிட. “மதம் வெறும் போதை வஸ்தாகிட”
வேதத்திலும்-சாத்தானின் வசனங்கள்- வியாக்கியானங்கள் மாறிட
நாளும் தோன்றும் பிரிவினைச் சபைகள்



யூத திருச்சங்கமாய் உருமாறி-நம்மில்
யார் பெரியவன்? அதிகாரப் போட்டிகளால்
பிளவுபடும் திருச்சபையால் -நாளும்
புரட்சி கிறிஸ்துவிற்கு மரணத் தீர்ப்புகள்?

“உண்மையும்” “வேதமும்”முரண்படும் அவலங்கள்
எதிர்கிறிஸ்துவின் தோற்றங்களோ?

விவிலியமும், அல்குரானும், தம்மபதமும்,
நூலகங்களில் ஒடுங்கிட, மானுடப் பாதையெங்கும்
நிலக்கண்ணிகளாய், புதைமணலாய்
“மதங்களும்”, “இஸங்களும்” (ISM)

யுத்தங்களும், மதப்போர்களும்-
மானுடத்தை எரிநரகாய் அச்சுறுத்திட
“புதியவேதம்” கொடுத்திட
புதிய மோயீசனைத் தேடும் இறைவன்

இறைவா இனியும் ஒரு “புதிய-வேதம்” எதற்கு?
இன்னுமோர் எரிநரகம் எதற்கு ?
மதவாதம் ஒழிந்தால் மானுடர் துயரம் தீரும்

இறைவனை மறந்து, “மனிதநேயம்” துறந்து
ஆணவம் நிலைத்திட வாழும் உலகில்
மதம் கடந்த ஆன்மீகவாதியை-நல்ல சமாரித்தனை
இறைவன் தேடிடும் அவலம்

தன்னையறிதலே மதம்-அன்புமயமாதலே சத்தியவழி
தம்மை அறிந்தவர்க்கு “மதம் பிடிப்பதில்லை”
மதம் பிடித்த யானைகள்போல மதவாதம்
குணப்படுத்த முடியாத மனதின் திமிர்வாதம்

ஆணவம் கழிந்தால் ஆனந்தம்
இன்றும் இயேசுவின் “விழிப்புணர்வு”
அறியப்படாத இரகசியமாய்
தேடப்படாத உண்மையாய் மாறிய துயரம்

ஆணவத்தின் உச்சத்தில்
‘கடவுளும் நாமே” “அரசனும் நாமே”என
தன்னைத் தானே பிரகடணபடுத்திய-
கொடுங்கோலன் பாரோ

எரியும் முட்செடியில் சத்தியும் சடமுமாய்
நிர்க்குணபிரம்மமும் , சகுணபிரம்மமுமாய்
காலம் கடந்த நித்தியமாய், இருப்பாய் இறைவன்

***பத்து வல்ல செயல்களால், "கடவுளும் நாமே-
அரசனும் நாமே" என்று பாரோவை அஞ்சவைத்தவர்***
" என்றும் இருப்பவர் நாமே" என்று
மோயீசனுக்கு இயம்பியவர்

"கடவுளும் அரசனுமான" "போலி மதங்களிடமிருந்து"
இன்றும் தம் மக்களை மீட்டிட-"மோயீசன்"
உன்னையும் அழைக்கின்றார்

"அன்பை விட மேலான தெய்வமில்லை
உண்மையை விட உயர்ந்த பாதையில்லை
நம்பிக்கை கடந்த வாழ்ந்தறியும்
உண்மையே இறைவன்

***உண்மையை, அன்பைத் தவமாக்கி வாழ்ந்திட
ஆணவப் பாதணிகளை கழற்று மானுடா,
இதயமே இறை வாழிடம், அதுவே புனித*** பூமி

அன்பே கடவுள், உண்மையே தெய்வீகம்
அன்பும், உண்மையும் வாழ்வானால்
வாழும் இறைவன் நீயாவாய்

***இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே***
Pax Ravichandra-12-10-2023

சாவுமணியும், சங்கொலியும்

வேதியரே, பார்பனரே- மனுஸ்மிருதியின்
சாதியம் ஒழிந்திட, திராவிடம் எழுந்திட-சாவுமணியும்,
சங்கொலியும் ஓங்கி ஒலிப்பது கேட்கின்றதா?
மனுநீதிச் சோழனின் காண்டாமணியும்
குரல் எழுப்புவது உறைக்கின்றதா?

ஊனிலும், என்பிலும், உள்ளோடும் குருதியிலும்-ஆரிய
மாயையிட்ட மனுஸ்மிருதியின் குறியோ சாதியம்?
திராவிடரை அடக்கியாள -தீந்தமிழை
நீஷமொழியென்றே ஒதுக்கிப்போட
பார்பனியம் எழுதிய பொய்ப்புராணமே சாதியம்.

பறைச்சி. பள்ளன் என்பதெல்லாம்-இறைச்சி, தோல்.
என்பில் இட்ட அழியாக் குறிகளோ? அன்பே சிவத்தின் நெறிகளோ?
அன்பே சிவத்திற்கு, அன்புதான் நீதி அறிவாய் மானுடா.
செய்யும் தொழிலே தெய்வம் என்றால் சாதியம் ஏது பார்பனா?

நெற்றியில் இட்ட நீறும், நாமமும் நெஞ்சு தரித்த
முப்புரி நூலும், உயர் சாதியத்துக்கு நீதியாகாது,
பொய்மை என்றுமே நிலைக்காது.

பெருமான் புத்தர் நிராகரித்த, புராணங்களும்
வேதங்களும் உண்மையாகாது, மஹாவாக்கியங்களெல்லாம்
சாதியம் கடந்த மானுடர்கே-ஆதி சங்கரா
சுடலையாண்டிக்குச் சாதி எது

மானுடம் தொழுது பணிந்திட பார்பனனாய்
ஆண்டு காத்திட க்ஷத்திரியனாய்,
வர்த்தக வாணிபம் செய்திட வைசியனாய்
உழைத்து, தொழுது. அடிமையாய் வாழ்ந்து
துண்டு அணியாமல் தொண்டுகள் புரிந்திட
சூத்திரனாய் ஒரு சாதி வேண்டுமென்றாள்
வேரோடு சாய்ப்போம் வேதியர் புராணத்தை,
தீயிட்டு எரிப்போம் தீட்டுக் கூறும் சாஸ்திரங்களை

மானுடத்தை இழிவுபடுத்தும் தெய்வங்கள் எல்லாம்
பொய்யே, பிராமணக் கற்பனை கதையே என்று அறிந்தே
உண்மை ஓங்கிட, பொய்மையை புறந்தள்ளிப் பழிப்போம்

மானுடம் ஒன்றே, தேவனும் ஒன்றே
மத,மொழி, நிற, இன போமெல்லாம் பிராமணப் பொய்யே,
குருதியிலும், தாய்பாலிலும் நிறபேதமில்லை,
மானுடத்தில் உயர்வு தாழ்வு இல்லை

சாதி உண்டென்று அன்பே சிவம் சொல்லுமோ?-சாதி
ஊனிலும், என்பிலும், உள்ளோடும் குருதியிலும்
ஆரியம் இட்ட மாயக் குறியென்று மானுடம் அறியுமே

வேதமென சொல்வதெல்லாம் பார்பனப் பொய்யே,
ஆரியப் புரட்டே, அறிவாய் திராவிடா?
"ஒன்றே குலம், ஒருவனே தேவன்"
"யாதும் ஊரே யாவரும் கேளீர்" முழங்கடா தமிழா

கல்லும், சிலையும் தொழுது கல்லான மனங்கள்
கனிந்து- அன்பே தெய்வமெனக் கூற
மறுக்கும் பொல்லாத குணங்கள்-

முருகனுக்கு வள்ளி குறத்தி அல்ல
சுடலையாண்டிக்குச் சுடுகாடு தீட்டு மல்ல
தமிழ் மறை ஓதி- வள்ளுவன் காட்டிய நல்வழியில்
வாழ்வாய் மானுடா-வாழ்வு நம் கையில்

கல்லும், சிலையும் தெய்வமல்ல, மந்திரங்களம்
கற்பூர ஆராத்தியும் வழிபாடுமல்ல
பொய்யுரைப்பது வேதமல்ல-மதங்கடந்து
தன்னைப்போல் பிறரை நேசிப்பவனோ ஞானி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-09-05-23

செந்தீயும் சீவர ஆடையும்- அளுத்கம

இன்று காவிகளின் இனத்துவேஷ வேள்வியில்-
ஆகுதீயாய் அப்பாவி முஸ்லீம்கள்-வேதமோதி
இனத்தீயில் குளிர்காயும் வேதியர்களாய்
சிங்கள காடையரும், குண்டர்களும்.

வாந்தியாய் காவிகள் துப்பிய இனத்துவேஷ காங்கையில்
முஸ்லீம்களின் வாழ்வும் வாழ்வாதாரமும் எரிந்திட
சிவப்பான காவியில் சாட்சிாய் செந்தீயின் நாக்கு ஒளிர்ந்திட
பொதுபலசேனாவின் புரட்சி

வீடுகளும் கடைகளும் ஆகுதீயாக
கபட வேடதாரிகளால், காடையர்களும் குண்டர்களும்
தேசப்பற்றாளர்களாக
பொதுபலசேனாவின் புதிய அசுரயாகம்.

சட்டமும் ஒழுங்கும் அலிகளாய் வேடிக்கை பார்க்க
சங்கமுமும், தம்மமும் பேரினவாதத்திற்கு சரணாகதியாக
வெறிகொண்ட சிங்கங்கள் வெள்ளாடுகளை வேட்டையாடிய
அவலங்கள் இங்கே-தம்மம் மௌனித்த சோதனையுமிங்கே

சீவர ஆடைக்குள்ளும்
சீவனைக் கொல்லும் நச்சரவங்கள்
பௌத்த காவிக்குள்ளும்-தாதாக்களாய்
மனம் திரும்பாத தேவதத்தர்கள்

காவிகளும், காக்கிச் சட்டைகளும் ஆசி வழங்கிட,
ஊமையும் அலியுமாய் ஒதுங்கி நின்று-ஊடகங்கள
சாட்சியம் பகிர்ந்திட,-அராஜகத்தின் அட்டூழியங்கள்

கொள்ளை, கொலை, தீவைப்பும் நடத்தி
அளுத்கம, பேருவளை, தர்க்கா நகர்களில்
கோரத்தாண்டவமாடிய இனவாதம்
சீவர ஆடைகளோ சாமரம் வீசி- இழிந்த மதவாதம்

வீடுகளும் வியாபாரத் தலங்களும் தீக்கிரையாக
அன்னையரும் தங்கையரும் அச்சத்தோடு கண்ணீரில் மூழ்க
அமைதியாய் ஆனந்தமாய் ஐவேளை
அல்லாவைத் தொழுத இனம் அகதியான கறுப்புத் தினம்

பாடசாலைகளும்-பள்ளி வாயில்களும்
அகதிகள் சரணாலயங்கள்-பௌத்த விகாரைகள்
பொதுபல சேனாவிற்கு பாசறைகள்

சீவர ஆடைக்குள்ளும் ஜீவனில்லா புத்த தர்மம்
பௌத்த விகாரைகளிலும்
காவி தரித்த தேவதத்த அதர்மம்

தந்தையை கேட்டு தவிக்கும் குழந்தைகள்
தாரமிழந்து பரிதவிக்கும் விதவைகள்.
வாழ்வாதாரமிழந்து வறுமையில் வாடும் செல்வர்கள்
வாழிடமிழந்து புகலிடம் கோரும் அகதிகள்.

அச்சத்தால் அண்ணகரும் அந்தகருமாய்
உருவழிந்த ஊடகங்கள்
பௌத்த சிங்கள அரசுக்கு அடிபணிந்தே
செய்திகளை தணிக்கை செய்த அவலங்கள்

“அஹிம்சை”-பௌத்தம்அறியாத அன்பின் வேதமோ?
வன்முறை சிங்கள பெரும்பான்மையினர்க்கு
வழங்கப்பட்ட வாழ்நாள் அரசியல் உரிமமோ?

அன்புதான் ஆண்டவன்-அன்புதான் வேதம்
அன்புநிலைதான் உயர் துறவு

சிரசை வழித்து சீவர ஆடை தரித்தவரெல்லாம்
துறவிகளல்லர்-சிந்தையில் கருணை பொங்கிட
வாழ்பவர்தான் துறவிகள்

அன்பே சிவம்-சிவமில்லாத வாழ்வு சவமே
ஜீவனில் விழிப்பில்லையேல்-துறவில் பலனில்லை
ஓதும் பிரித்தும் ஓலிக்கும் வெற்று சப்தமாகும்
அணியும் காவியும் வெற்று அலங்காரப் போர்வையாகும்

அன்று சீவர ஆடையை சிவப்பாகியதோ தமிழ் இரத்தம்
இன்று சீவர ஆடையை சிவப்பாக்கியதோ முஸ்லீம் இரத்தம்
அல்லாஹு அக்பர்

புத்தம் சரணம் கச்சாமி தர்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி
நாளும் எழுப்பிடும் வெற்றுச் சத்தங்கள்

தொப்பியணிந்து, வுளூ செய்து, ஐவேளை தொழுதும்
அல்லாஹ்வால் தொடப்படாத முஸ்லீம் தலைவர்கள்,
முகமும் நிலமும் தொட்டதினால் தோன்றிய நெற்றித் தழும்புகள்
தொழுகையின் விழுப்புண்ணாய் பெருமை பாராட்டும் மூடர்கள்,

“∴பனா” அழித்து அன்பினால் வல்ல அல்லாஹ்வை
அனுபூதியில் அறியாத குருடர்கள், ஹஜ் செய்து
“க∴பாவை” சுற்றி-ஹாஜி பெயர் தரித்தாலும்
ஈமான் வழி நிற்காத மூடர்கள்

முஸ்லீம் தலைவர்கள்-ஆளும் சிங்களத்தை தொழுதிட
தொப்பி மறைத்து, ஈமான் மறந்து, சலுகைகளுக்காய்
உரிமைகளை விலைபேசும் சந்தர்ப்ப அரசியல் வியாபாரிகளே
அரசியலை ஷிர்க்காய் ஆக்கிய மூடர்களே..

‘லாஇலாஹ இல்லல்லாஹ்
முஹம்மது ர்ரஸூலுல்லாஹ்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-6-04-2023

Fanaa (Arabic فناء fanāʾ) is the Sufi term for "passing away" or "annihilation" (of the self).[1] Fana represents a breaking down of the individual ego and a recognition of the fundamental unity of God, creation, and the individual self.[1] Persons having entered this enlightened state obtain awareness of the intrinsic unity (Tawhid) between Allah and all that exists, including the individual's mind. It is coupled conceptually with baqaa, subsistence, which is the state of pure consciousness of and abidance in God.

சிலுவை

புதைகுழிகளிலும், கோயில் கோபுர உச்சிகளிலும்
விசுவாசிகளின் கழுத்திலும் வெற்றுச் சிலுவைகள்?-பலி
சடங்குகளால் ஆலயங்களும், காடாய் மாறிட
விசுவாசிகளும் நடைப்பிணங்களாய் மாறினரோ?

மனமே காலம், மனமே மரணம்
மனமழிந்த நிலையே நிலை வாழ்வு
மனமழிந்த தூய நிலையே ஆத்ம தரிசனம்
அதுவே இறையரசு

மனமழிந்தவருக்கு மரணமில்லை
மனமழிந்தவருக்கு என்றும் நிகழ்காலமே

நடைப்பிணமாய் வாழ்ந்த இலாசரை
நிலை வாழ்வுக்கு அழைத்திட-இயேசு விடுத்த அழைப்பே
"***இலாசரே வெளியே வா***"

ஆணவ மனதினின்று-தூய மனதிற்கு
மனமழிந்த புனித நிலைக்கு- இறைவாக்கு
நிலை வாழ்வுக்கு விடுத்த அழைப்பு

கணந்தோறும் மாறும் உடலுக்கே மரணம்
ஆன்மா உடை மாற்றும் நிகழ்வே மரணம்
தூய மனமோ அழிவற்ற ஆத்மா
ஆத்மாவுக்கு மரணமில்லை

பெருமான்கள் உரைத்த உண்மை ஒன்றே-
நதிகளின் பாதைகள் வேறாகலாம்
ஆனால் சேருமிடம் ஒன்றே -இருப்பாய்,
இறைவனாய், சூனியமாய் அதுவே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-12-10-2023

முத்துச் சிப்பி

பார்பனருக்கு ஓதிட ‘‘மனுஸ்மிருதியின் சாதியம்’’
பஞ்சபூதங்களுக்கில்லை -ஆடும் மயிலுக்கில்லை
பாடும் குயிலுக்குமில்லை

எங்கும் புத்தர் சிலைகள்
நெஞ்சங்களில்-புத்தநிலைக்கோ பஞ்சம்
எங்கும் கோயில்கள்-மசூதிகள்
இறைவனைத்தான் காணோம்.

புதைகுழிகளின் தலைமாட்டில் வெற்றுச்சிலுவைகள்
மயானத்திலும்-இயேசுவிற்கு மரணஅச்சுறுத்தல் ?

மதங்கள் மாசடையும் இடங்களாய்
கோயில்கள்-மசூதிகள்-விகாரைகள்

கொடுக்கிருந்தும் தேனீக்கள் பூக்களைக் கொட்டுவதில்லை
முள்ளிருந்தும் ரோஜாக்கள் வண்டுகளை மிரட்டுவதில்லை

நான் பாவம் செய்யாவிட்டால்-இறைவா
உன் கருணைக்கு இடமேது?

எளிய மனமே மோட்சம்-ஆணவ மனமே நரகம்
மலர் வீணையில் தேனீ வாசிக்கும்
ராகமோ ரீங்காரம்?

மூடிய பங்களாக்களின் வாயில்களில்
காவல் நாய்களும், காவலாளிகளும்
ஏழையின் குடிசைகளில்
வாலாட்டிக் கிடக்கும் பறை நாய்கள்
பூட்டுக்களில்லாத கதவுகள்.

கல்லான அகலிகையும்-ஸ்ரீராமன்
கால்படப் பெண்ணாணாள்
ஸ்ரீராமனைக் கைபிடித்த சீதையோ-வனமேகி,
தீக்குளித்து-வாழ்விழந்து வனவாசியானாள்?

குருஷேத்திரத்தில் வாக்கெடுப்பு-நடந்திருந்தால்
தர்மம் தோற்றிருக்கும்

மண்ணால் மனிதனைப் படைத்து
அன்பு விதைகளை நெஞ்சில் விதைத்து
அனுப்பி வைத்தான் மனிதன் தன்னை அறிந்திட?
ஆசை விதைத்த களைகளால்-இறைவனை
அறியாமல் பாழாகும் மனித வாழ்வு

படைப்பில் இறைவன் விட்ட பாரிய தவறா
செத்த கோள்களும், மெல்லச் சாகும் பூமியும்?
செத்தகோள்களை விஞ்ஞானம் ஆய்வுசெய்ய
கோள்களுக்கு கட்டம் கட்டி-மனிதனுக்கு
ஜாதகம் கணிக்கும் சோதிடன்-வித்தகன்

சீதன ஏலத்தில்-கணவர்களை வாங்கிடும் செல்வக்குமரிகள்
கண்ணீரில் ஏழைக் காதலிகளும், முது கன்னியரும்

வாழ்வுக் கனியை உண்டதாலா-விலக்கப்பட்ட
மரத்தின் அறிவுக்கனியை உண்ண அலகை விரும்பவில்லை-
அமரத்துவமே கடவுள் அறிந்த
சாத்தானுக்கு கடவுளாக ஆசையில்லை?

இறைவா! என் தந்தை நீ- உன் பிள்ளை நான்
உன்னிடம் பிச்சை எடுக்க- என்னை
ஏழையும் பாவியுமாக்கியது இழிந்த மதங்கள்

வறுமையால் கற்பும், மானமும் கடைச் சரக்காகிட
மலிந்த காமத்தால் விலைபோகும் பெண்மை
பிஞ்சை அழித்து கருக்கலப்புச் செய்யும் தாய்மை?
பெண்ணுரிமை?

பூட்டப்பட்ட வீடுகளையும் மூடிய சத்திரத்தையும் தட்டிக் களைத்தவர்
தொழுவத்தை கண்டு மகிழ்ந்தனர்-அன்று நத்தார் பெருநாள்.
கோயில்களில் கொண்டாட்டங்கள், வாணவேடிக்கைகள்
தொழுவத்திலோ குழந்தை இயேசுவோடு தாய் மரியாள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-05-23